பில்லி கிரகாம்
வாழ்க்கை வரலாறு



எச்.பி.ராஜ்குமார்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

S. Annie Geeta
VIII 'F'

பில்லி கிரகாம்

St. Ignatius' Convent.

வாழ்க்கை வரலாறு

எச்.பி. ராஜ்குமார்

SUNDAY SCHOOL UNION EXAM - '99
PALAYAMKOTTAI

Name : S. Annie Geetha
Group : Junior
Prize : I
Church : Adaikalapuram Sunday School
Pastorate/School :

Date : 21-03-99

President

H.B. RAJKUMAR
30, 12th Street,
Padi Pudu Nagar,
Anna Nagar West,
CHENNAI – 600 101

அன்புமலர் வெளியீடு – 9
புனிதா ராஜ்குமார் நினைவு வெளியீடு – 102
எச்.பி. ராஜ்குமார் நூல்வரிசை – 5 (73)

© H.B. Rajkumar
Revised & Illustrated edition, February 1998

உள்ளே...

1. மனந்திரும்பினார் பில்லி கிரகாம்! ... 3
2. வேதாகமக் கல்வி பயின்றார்! ... 10
3. ஊழியம் துவங்கியது! ... 19
4. வல்லமையோடு பரவிய ஊழியம்! ... 29
5. எங்கும் பரவிய எழுப்புதல்! ... 38
6. உலகளாவிய நற்செய்திப் பணி தொடர்கிறது! ... 51
7. பல்வேறு வல்லமையான ஊழியங்கள்! ... 61
8. எழுப்புதல் கூட்டங்களின் வல்லமை! ... 74
9. கிறிஸ்துவின் செயல்வீரர் பில்லி கிரகாம்! ... 86

அன்புமலர் வெளியீடு

S. Annie Greeta

1

மனந்திரும்பினார் பில்லி கிரகாம்!

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

கார்காலத்து இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு எழுந்தது அந்தக் குரல். தவளைகள் பக்கவாத்தியம் இசைக்க, ஆந்தைகள் அலற அந்த இரவு வேளையில் ஓர் இளைஞன் நற்செய்தியை அறிவித்துக் கொண்டிருந்தான். அவனுடைய பேச்சைக் காது கொடுத்துக் கேட்க ஒருவருமேயில்லை!

இன்று தன்னுடைய வல்லமை வாய்ந்த பேச்சினால் இலட்சக்கணக்கான மக்களை இறைவனுடைய அருளுக்குள் உட்படுத்தும் பில்லி கிரகாம்தான் அவர். தன்னுடைய பேச்சை எவரும் கேட்டால் கேலி செய்வார்களோ என்ற கூச்சத்தினால் இரவின் அமைதியில் பேசிப் பழகினார் பில்லி கிரகாம்.

கூச்ச சுபாவமுள்ள அந்த இருபது வயது இளைஞன், இன்று 'கிறிஸ்தவ சபை வரலாற்றிலேயே இவருடைய பேச்சைக் கேட்டு மனந்திரும்பிய மக்களின் எண்ணிக்கைபோல வேறு எவருக்குமே இல்லை' என்று கூறும் அளவுக்குச் சிறந்து விளங்குகிறார்!

பிறப்பு

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வட கரோலினா மாநிலத்தில் சார்லெட் என்பது ஒரு சிறிய நகரம். அங்கு தன்னுடைய நேர்மையான வியாபாரத் திறமையினால் புகழ்பெற்று விளங்கினார் இருநூறு ஏக்கர் பண்ணை ஒன்றுக்கு உரிமை யாளரான வில்லியம் பிராங்க்ளின் கிரகாம்.

அன்பே உருவான அவருடைய மனைவி மார்ரோ கிரகாம் தெய்வபக்தி நிரம்பப்பெற்றவர். இவர்களுடைய மூத்த குழந்தையாக, பில்லி கிரகாம், 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் நாள் பிறந்தார்.

அந்தக் குழந்தையின் அழகான நீலநிறக் கண்களும், நேர்த்தியான முடியழகும் அனைவரையும் கவர்ந்து, அவர்மீது தனி அன்பு கொள்ளச் செய்தன.

இளமைப்பருவம்

பொருளாதார நிலைமையில் சிக்கலான கட்டத்தில், அமெரிக்க நாடே சிக்கித் தவித்த நேரம் அது. ஆனால் பெரிய பண்ணையில் பிறந்த பில்லியோ எந்தவிதக் கவலையுமின்றி வளர்ந்து வந்தான்.

அந்த இளம் வயதிலேயே பில்லி தன்னுடைய பண்ணைக்கருகே குடியிருந்த ஒரு நீக்ரோ குடும்பத்துச் சிறுவர்களுடன் தோழமையுடன் பழகினான். பின்னர் நிக்ரோ மக்களின் சம உரிமைக்காக வாதாடும் பண்பை இந்த இளம் வயதுப் பழக்கமே அவருக்கு அளித்தது எனலாம்.

பண்ணையின் பணிகளில் சிறு வயது முதற்கொண்டே பில்லி ஆர்வத்துடன் பங்கு கொண்டான். விரைவிலேயே, அந்த வட்டாரத்திலேயே மிக வேகமாகவும், திறமையுடனும், பால் கறப்பவனென்ற பட்டத்தையும் பெற்றுவிட்டான்!

கல்வி

சிறுவயதில் பில்லி செய்த குறும்புகளுக்கு அளவே கிடையாது. தங்கை காதரீனின் முடியைப் பிடித்திழுப்பது, கேலி செய்வது இவற்றுக்காக எத்தனையோ முறை பெற்றோரிடம் தண்டனை பெற்றுள்ளான்.

கண்டிப்பான முறையில் பிள்ளைகளை வளர்த்தாலும், பில்லியின் தாய் தந்தையார் பிள்ளைகளிடம் காட்டிய அன்புக்குக் குறைவே கிடையாது.

பிள்ளைகளை வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஓய்வுநாட்பள்ளிக்குச் செல்வதிலும் ஒழுங்காகப் பழக்கினார்கள்.



பில்லி கிரகாமின் தாயார் திருமதி மார்ரோ கிரகாம்

நல்லதொரு குடும்பத்துக்கு நற்சான்றாக விளங்கியது அக் குடும்பம்.

ஷாரோன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது பில்லி பேஸ்பால் விளையாட்டில் விருப்பம் கொண்டான். பதினாறு வயதாகும்போதே பேஸ்பால் விளையாட்டில் சிறந்தவன் என்ற பெயரையும் பெற்றான். ஆனால் வாழ்க்கையில் பெரிய விளையாட்டு வீரனாக வேண்டும் என்ற அவனுடைய எண்ணம் மட்டும் நிறைவேறவில்லை!

சிறுவயதிலேயே நூல்கள் வாசிப்பதில் பில்லிக்கு நிறைய ஆர்வம் உண்டு. பதினான்கு வயது நிறைவதற்குள்ளாக நூற்றுக்கு மேற்பட்ட வரலாற்று நூற்களைப் படித்து முடித்து விட்டான். இன்றும்கூட நடப்புச்செய்திகளை தன்னுடைய அருளுரைகளில் இணைத்துக் கூறும் திறமை பில்லி கிரகாமுக்கு உண்டு. தன்னுடைய மூத்தமகன் இறைவனுடைய பணியில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன் மார்ரோ கிரகாம் ஜெபித்து வந்தார். ஆனால் பில்லியின் குறும்பு விளையாட்டுகளோ பெருகி வந்தன. பண்ணையின் காரை எடுத்துக் கொண்டு படுவேகமாக ஓட்டித் திரிவது பில்லியின் பொழுதுபோக்கு!

ஒரு முறை கார் சேற்றில் புதைந்துவிட பில்லியின் தந்தையார், குதிரைகளைக் கட்டி அதை வெளியே இழுக்க நேரிட்டது! குறும்புக்காரனே ஒழிய மற்றபடி பில்லி எந்தவிதக் கெட்ட பழக்கமும் இல்லாமலேயே விளங்கினார். என்றாலும் பொறுப்பற்றவனாகத் திரிந்த தன் மகனுக்காக மார்ரோ மிகவும் கவலைப்பட்டார்.

நற்செய்திக் கூட்டங்கள்

பில்லிக்குப் பதினைந்து வயதாகும் வேளையில் தந்தை பிராங்க்ளின் கிரகாம் ஒரு பெரும் விபத்தில் சிக்கி சாகுந்தருவாயில் இருந்தார். மார்ரோவின் இடைவிடாத

ஜெபத்தினால் அவருக்குப் பூரண சுகம் கிடைத்தது. அதிலிருந்து குடும்பத்தில் வேத வாசிப்புக்கும் ஜெபத்துக்கும் அதிக நேரம் ஒதுக்கப்பட்டது.

1934ஆம் ஆண்டு மே மாதத்தில் சார்லெட் நகரத்தின் முப்பது வணிகர்கள் சேர்ந்து ஒரு முழு நாள் ஜெபக்கூட்டம் நடத்தினர். பிராங்க் கிரகாம் அதற்காக தன்னுடைய பண்ணையில் இடவசதி செய்து கொடுத்தார்.

பூமியின் ஒவ்வொரு மூலையிலும் நற்செய்தியை அறிவிக்கும்படி, தேவன் சார்லெட் நகரத்திலிருந்து ஒருவரை எழுப்ப வேண்டும் என்ற ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபம் பில்லி கிரகாமின் பணியினால் நிறைவேறுகிறது என்பது எவ்வளவு பெரிய ஆச்சரியம்!

இந்த வணிகர்களின் முயற்சியால், மொர்தேகாய் ஹாம் என்ற பிரசங்கியார் 1934 செப்டம்பரில் சார்லெட் நகரத்துக்கு வந்து பதினொரு வாரங்கள் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தினார்.

ஆனால் பில்லி இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள வில்லை. இதையறிந்த ஆல்பர்ட் என்ற நண்பர் ஒரு தந்திரம் செய்தார். தன்னுடைய வண்டியில் நிறைய இளைஞர்களை ஏற்றிக் கொண்டு, பில்லியைக் கூட்டத்துக்கு ஓட்டிச் செல்லும்படி கூறினார். கார் ஓட்டுவதில் விருப்பம் கொண்ட பில்லி வண்டியை ஓட்டிச் சென்றான்.

அப்படியே அந்த மாபெரும் கூட்டத்தின் இறுதியில் அமர்ந்துகொண்டான். விரைவிலேயே மொர்தேகாயின் பேச்சு அவனைக் கவர்ந்தது. அவனுடைய உள்ளத்தில் புயல் வீச ஆரம்பித்தது. இரவில் தன்னுடைய அறையில் மனஅமைதி யின்றித் தவித்தான். அவனுடைய மனப் போராட்டத்தை அறிந்த ஆல்பர்ட் அவனுக்காக ஜெபித்து வந்தார்.

மறுநாள் பில்லி தானாகவே கூட்டத்தில் கலந்து கொண்டான். கிரேடி வில்சன் என்ற நண்பனும் அவனுடன்

வந்திருந்தான். மொர்தேகாய் பேசும்போது கை விரலால் சுட்டிக் காட்டிப் பேசுவதுண்டு. பில்லிக்கு அவர் தன்னை நோக்கித்தான் சுட்டிக் காட்டுகின்றார் என்ற பயம். முன்னாலிருந்த ஒரு பெண்மணியின் தொப்பிக்குப் பின்னால் மறைந்துகொண்டான்!

விரைவிலேயே பயம் தெளிந்த பில்லி, முன் வரிசை யிலேயே அமர்ந்து ஆர்வத்துடன் நற்செய்தியைக் கேட்க ஆரம்பித்தான்.

மனந்திரும்பிய பில்லி

ஒருநாள் எப்போதும்போல மொர்தேகாய் தன்னுடைய அருளுரையை முடித்தவுடன், இயேசுவை மீட்பராக ஏற்றுக் கொள்ள விரும்புவோரை முன்னே வரும்படி வேண்டுதல் விடுத்தார்.

பாடகர் குழு 'நான் பாவிதான், ஆனாலும் நீர்' என்ற பாடலை இசைத்துக்கொண்டிருந்தது. பில்லியின் மனப் போராட்டம் இறுதியில் வெற்றிபெற்றது.

முன்னால் சென்று தன்னை இறைவனின் கரங்களில் ஒப்புக்கொடுத்தான். அவனுடன் நண்பன் கிரேடி வில்சனும் மனந்திரும்பி, இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டான்.

பில்லியின் பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அவனுடைய தந்தை அவனைக் கட்டித் தழுவி முத்த மிட்டார். பில்லியின் வாழ்க்கை புது வடிவம் பெற்றது. வேதாக மத்தில் அதிகம் ஆர்வம் கொணடான்! குறும்பு சுபாவம் அறவே அகன்றது. மார்ரோ தன்னுடைய ஜெபம் கேட்கப்பட்டமைக்காக தேவனைத் துதித்தார்!

முதல் சாட்சி

1936இல் ஜிம்மி ஜாண்சன் என்ற பிரசங்கியாருடன், இளைஞர் பில்லி மன்ரோ சிறைசாலையிலுள்ள சிறைக் கைதிகளைப் பார்க்கச் சென்றிருந்தார். திடீரென்று,

அருளுரையின் நடுவில், ஜாண்சன் பில்லியைச் சாட்சி பகரும்படி பணித்துவிட்டார்!

திடுக்கிட்ட பில்லி, திக்கித் திணறி, நான்கைந்து வார்த்தைகளில், தான் இரட்சிக்கப்பட்ட நிகழ்ச்சியை விவரித்து முடித்தார். பில்லி கிரகாம் நற்செய்தி பகர்ந்த முதல் வேளை இது!

கிரேடி வில்சன்

பில்லியின் நண்பரான கிரேடி வில்சனோ இதற்குள் அருளுரையாற்றத் துணிந்துவிட்டார். தடுமாற்றம் நிறைந்த குரலில் அருளுரையைத் துவங்கிய கிரேடி வில்சன் விரை விலேயே ஒரு மணி நேரத்துக்குமேல் பேசும் வல்லமை பெற்றதைக் கண்ட பில்லி வியப்படைந்தார்.

ஆனால் அவர் இன்னும் அருளுரையாற்றித் துணிய வில்லை. ஓய்வுநாட் பாடசாலையில் சாட்சி கூறுவதில்கூட அவருடைய தடுமாற்றமும், கூச்சமும் இன்னும் தணிய வில்லையே!

2

வேதாகமக் கல்வி பயின்றார்!

மகனின் மனமாற்றத்தைக் கண்ட மார்ரோ கிராகாம் அவர் திருமறையில் மேலும் பயிற்சி பெறவேண்டும் என்று விரும்பினார். 1936இல் பில்லி பாப் ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். கிரேடி வில்சனும் அவருடன் அந்த கல்லூரியிலேயே சேர்ந்தது பில்லிக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது.

டாக்டர் பாப் ஜோன்ஸின் பிரசங்கங்கள் பில்லியின் மனதைக் கவர்ந்தன. ஆனால் மத விஷயத்தில் அந்தக் கல்லூரியின் கட்டுப்பாடுகள் பில்லிக்குப் பிடிக்கவில்லை. ஆவிக்குரிய சிந்தனைகளில் ஆழமாக ஆராயும் மனப்போக்கு ஊக்குவிக்கப்படவில்லை.

இதற்கிடையே கிறிஸ்மஸ் விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த பில்லியை 'ப்ளூசுரம்' பற்றிக்கொண்டது. உடல் பூரண குணமடைந்த பின்னர் பில்லி மீண்டும் பாப் ஜோன்ஸ் கல்லூரிக்குச் செல்லவில்லை.

பிளாரிடா வேதாகமப் பாடசாலை

போதுமான சூரிய ஒளி பில்லியின் ஆரோக்கியத்துக்கு ஏற்றது என்று மருத்துவர் ஆலோசனை கூறியிருந்தார். அடுத்த ஆண்டு பில்லி பிளாரிடா மாநிலத்தில் டாம்பா நகரிலிருந்த பிளாரிடா வேதாகமப் பாடசாலையின் மாணவரானார்

அந்தப் பாடசாலையின் கிறிஸ்தவ சூழ்நிலையும், சுற்றுப் புறத்தின் ரம்மியமான பருவ நிலையும் பில்லிக்குப் படிப்பில் ஆர்வத்தைத் தூண்டி உற்சாகமூட்டின.

திருமறை, கிரேக்க மொழி, திருச்சபை வரலாறு இறையியல் இவைகளை விருப்பப் பாடங்களாக எடுத்துக் கல்வி

பிளாரிடா வேதாகமக் கல்லூரியில் படிக்கும்போது (1938)
பில்லி கிரகாம் (நடுவில்)

பயின்றார். இந்த மூன்றரை ஆண்டு காலக் கல்வி பில்லியின் பிற்கால வாழ்க்கைக்கு ஒரு சிறந்த அஸ்திவாரம் அமைத்தது எனலாம்.

போதுமான உடல் ஆரோக்கியத்துக்காக 'கால்ப்' விளையாட்டில் ஈடுபட்டார். புல் தரையை வெட்டி ஒழுங்கு படுத்துவது போன்ற பணிகளிலும் ஈடுபடுவது உண்டு. இரவு வேளையில் படுக்கைக்கு அடியில் உடன் தங்கும் மாணவருடன் மல்யுத்தம் செய்ததும் உண்டு!

ஒவ்வொன்றும் முக்கால் மணி நேர அளவு வரும்படியாக நான்கு அருளுரைகளை பில்லி தயாரித்து பயிற்சி செய்து வந்தார். மாணவர்களிடையே பேசிப் பழகிக் கூச்சப்பட்ட பில்லி, இரவு வேளைகளில் அருகிலிருந்த சதுப்பு நிலக் காட்டிற்குச் சென்று பேசிப் பழகினார்.

ஒருமுறை பில்லி பாடசாலை ஆசிரியர் ஒருவரின் நான்கு வயதுப் பையனை முன்னால் வைத்துக்கொண்டு ஒரு பெரிய அருளுரையே நிகழ்த்திவிட்டார்!

பில்லி செய்த முதல் பிரசங்கம்!

அவருடைய கூச்ச சுபாவத்தை அறிந்த பாடசாலை முதல்வர் ஜான் மின்டர் சரியான வேளைக்காக காத்துக் கொண்டிருந்தார். ஈஸ்டர் விடுமுறையின்போது பில்லி, ஜான் மின்டரின் அழைப்பின்பேரில் அவருடன் மெல்ரோசிலிருந்த பயிற்சிக் கூடத்தில் தங்கியிருந்தார்.

ஈஸ்டர் ஞாயிறும் வந்தது. சிசில் அண்டர்வுட், பில்லி, மின்டர் மூவரும் ஆராதனையில் பங்குகொள்ள, பாஸ்டிச் என்ற ஊரிலுள்ள சிறிய ஆலயமொன்றுக்குச் சென்றிருந்தனர். சற்றும் எதிர்பாராதவிதமாக மின்டர், பில்லியை அருளுரையாற்றும்படி கட்டளையிட்டார்.

திடுக்கிட்ட பில்லியால் அவருடைய கட்டளையைத் தட்டவும் முடியவில்லை. சுமார் முப்பதுபேர் கூடியிருந்த அந்த

ஆலயத்தில் பேச எழுந்தார் பில்லி. அவர் பயிற்சி செய்து வைத்திருந்த அருளுரைகள் கைகொடுத்து உதவவில்லை!

ஆனால் அவருடைய பேச்சு வலிமைபெற்று விளங்கியது. நான்கு அருளுரைகளையும் எட்டே நிமிடங்களில் பேசி முடித்து விட்டார் பில்லி!

மீண்டும் ஒருமுறை மின்டர் டாம்பாவிலிருந்த நற்செய்திக் கூட்டத்தில் பில்லியைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். பில்லிக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அறைத் தோழன் உட்ரோபிளின் அருளுரையாற்ற பில்லி குறிப்புகள் எடுத்துக் கொண்டார்.

முயல்களிடமும், அணில்களிடமும் பேசிப் பயிற்சி செய்து கொண்டார். தடுமாற்றம் ஓரளவு குறைந்தது. கேட்டவர்களின் பாராட்டையும் பெற்றார். அவர்களுடைய ஊக்கத்தினால் பில்லியின் ஆர்வம் வளர்ந்தது. 1937 இறுதிக்குள் கூச்சமின்றி அருளுரையாற்றும் திறமையைப் பெற்றுவிட்டார்.

பில்லியுடன் எமிலி ரெஜினா என்ற மாணவியும் படித்து வந்தாள். இசையில் ஆர்வம்கொண்ட, புத்திக்கூர்மை வாய்ந்த மாணவி இவள். அவளுடைய டென்னிஸ் விளையாட்டைக் கண்டு பாராட்டிய பில்லிக்கும் எமிலிக்கும் நெருங்கிய நட்பு உருவாயிற்று. இருவருமாகச் சேர்ந்து எமிலியின் இல்லத்துக்கும் சென்று வருவதுண்டு.

1937 கோடைகால விடுமுறையின்போது, எமிலியைத் தான் மணக்க விரும்புவதாகக் கடிதம்மூலம் தெரிவித்தார் பில்லி. எமிலி அவருடைய விருப்பத்துக்கு இசைந்து அவரை மேலும் இறையியல் கல்வியில் ஈடுபடுமாறு உற்சாகமூட்டினாள்.

மற்றவர்களைப்போலச் சரளமான நடையில் பேச முடியவில்லையே என்ற கவலை பில்லியை வாட்டியது. மோசேயைப் போன்று, தன்னாலும் பேச முடியவில்லையே என்று வருந்தினார்.

"நீ போ, நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்" (யாத். 4:12) என்ற தேவ வாக்குத்தத்தம் அவருக்கு ஆறுதலளித்தது. தன்னால் முடிந்த மட்டும் தாம் தினமும் சந்திப்பவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றிச் சாட்சி பகரத் தூவங்கினார்.

ஆண்டவருடைய அழைப்பு

1938ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒரு நாள் இரவு பள்ளியின் அருகிலிருந்த கால்ப் மைதானத்தில் உலாவிக் கொண்டிருந்தார். வெண்ணிலவு ஒளிவீசிப் பிரகாசித்தது. இயற்கையழகின் அமைதி அங்கே நிலவியது. தன்னுடைய உள்ளத்தில் ஒரு புத்துணர்வு எழுவதை பில்லி உணர்ந்தார். முழங்காற்படியிட்டு ஜெபித்தார். தேவ அழைப்பு அவருக்குப் புலப்பட்டது.

"தேவனே! நான் ஒரு பிரசங்கியாக வேண்டுமென்று நீர் விரும்பினால், என்னை முழுமையாக ஒப்படைக்கிறேன்" என்று ஜெபித்து தேவ அழைப்பை ஏற்றுக்கொண்டார். அந்த வேளையில் இலட்சக்கணக்கான மக்களுக்கு தாம் அருளுரையாற்றுவது போன்ற தரிசனங்களையும் கண்டார்.

இதற்குப்பிறகு பில்லியின் அருளுரைகள் புது வல்லமை பெற்று விளங்கின! கிழக்கு பலாட்கா என்ற இடத்தில் நரகத்தைப் பற்றி அவர் பேசியதைக் கேட்ட சபையினர் அதிகாரத்துடன் அவர் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டனர்.

சபைகளிலிருந்து பிரசங்க அழைப்புகள் வராததினால், பில்லி இரண்டு மூன்று சக மாணவர்களை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு தெரு முனையிலும் நின்று நற்செய்தியை அறிவிப்பது வழக்கம். சில ஞாயிற்றுக்கிழமைகளில் ஏழு அல்லது எட்டு தெருப் பிரசங்கங்கள்கூடச் செய்வதுண்டு! இடையிடையே டாம்பாவிலிருந்த சிறைச்சாலைக்குச் சென்று, கைதிகளின் வினாக்களுக்கு விடையளித்து உற்சாகமூட்டி

வந்தார். இவருடைய ஆர்வத்தைக்கண்டு பாராட்டிய முதல்வர் மின்டர் ஒருமுறை பில்லியை ஆறு வாரங்களுக்கு, டாம்பா நற்செய்திக் கூடத்தின் உதவிப் போதகராக நியமித்து ஊக்கு வித்தார்.

பெருங்குரலுடன், மிகவும் வேகமாக அவர் பேசிவந்தது குடிகாரர்கள், கைதிகள் இவர்களின் கவனத்தைக்கூடக் கவர்ந்து பலனளித்தது!

நற்செய்தி அறிவிக்கும் நாட்களில் பெரும்பகுதியை ஜெபத்திலேயே கழிப்பதினால் மேடையில் ஏறும்போது சோர் வடைந்து காணப்படுவார். ஆனால் அவர் முயற்சியைக் கைவிடவில்லை.

1938ஆம் ஆண்டு மே மாதம் பில்லியை ஓர் அதிர்ச்சி தாக்கியது. சார்லஸ் மேசி என்ற சகமாணவர், பில்லியை விட தன்னுடைய எண்ணங்களுக்கு ஏற்றவர் என்று உணர்ந்த எமிலி, அவரை மணந்துகொள்ளத் தீர்மானித்தார். பில்லியின் வருத்தத்துக்கோ அளவேயில்லை!

படிப்பையும், தேவ அழைப்பையும் மறந்து கவலையில் மூழ்கினார். இதையறிந்த மின்டர், "மற்றவர்களுடைய துக்கத்தில் அவர்களுக்குத் தேவனுடைய அன்பைச் சுட்டிக் காட்டி ஆறுதலளிக்க வேண்டிய நாமே கவலைப்படலாமா?" என்று கூறித் தேற்றினார்.

தவறை உணர்ந்த பில்லி மீண்டும் தன்னுடைய பணிகளில் ஈடுபட்டார். எமிலி, சார்லஸ் இவர்களுடைய திருமணத்திற்குச் சென்று வாழ்த்தினதோடு மட்டுமின்றி நீண்ட காலம் அவர்களுடன் நட்புறவும் கொண்டிருந்தார்.

மனந்திரும்பிய இளைஞர்

ஒரு ஞாயிற்றுக்கிழமை. பிளாரிடாவில், வெனிஸ் நகரிலிருந்த ஆலயமொன்றில் அருளுரையாற்றும் வாய்ப்பு பில்லிக்குக் கிட்டியது. சுமார் நூறு பேர் கூடியிருந்த சபையில் வல்லமையுடன் பேசினார்.

அருளுரை முடிவடையும்போது, மொர்தேகாயின் முறையைப் பின்பற்றி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்களை முன்னே வரும்படி வேண்டிக்கொண்டார். முப்பத்தியிரண்டு இளவயதினர் முன்னே வந்ததைக் கண்டு பில்லியே ஆச்சரியப் பட்டார். தேவ ஆவியானவரின் அருட்செயலே இது என்று உணர்ந்து அவரைத் துதித்தார்.

ஞானஸ்நானம்

ஒருநாள் தாம்பா வளைகுடாவில் படகைச் செலுத்தியவாறு சிந்தனையில் மூழ்கியிருந்தார் பில்லி. குழப்பமான மனநிலையில் தன்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதைத் தெளிவாக காட்டுமாறு தேவனை வேண்டிக் கொண்டார். திடீரென்று கடலின் மறுகரைக்குச் செல்லும்படி அவர் தூண்டடப்பட்டார்.

மறுகரையை அடையும்போது அவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. கரையில் நின்றிருந்த ஒருவர் அவரை நோக்கி வந்தார். "ஐயா, பில்லிகிராகாம் என்பது நீர்தாமா? தயவுசெய்து எங்கள் சபையில் எழுப்புதல் கூட்டம் நடத்த வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

தன்னுடைய வேண்டுதல் ஆச்சரியமான முறையில் பதிலளிக்கப்பட்டிருப்பதைக் கண்ட பில்லி உடனே சம்மதித்து விட்டார். பலாட்கா என்ற ஊரிலிருந்த பாப்டிஸ்ட் ஆலயத்தில் எழுப்புதல் கூட்டம் நடைபெற்றது. ஆவியின் கிரியை வல்லமை வாய்ந்ததாக இருந்தது. ஏராளமான பேர் மனந்திரும்பினர்.

ஆராதனை முடிவடைந்தவுடன் சபைப் போதகர் பில்லி யிடம் அவர் எந்த சபையைச் சேர்ந்தவர் என்று வினவினார். பில்லி அளித்த பதில் அவரை வியப்படையச் செய்தது! பிரிஸ் பிட்டிரியன் சபையைச் சேர்ந்த பில்லி, பாப்டிஸ்ட் ஆலயத்தைச் சேர்ந்தவர்களின் மனமாற்றத்துக்குக் காரணமாயிருந்திருக் கிறார்!

பில்லி ஏற்கெனவே முழுக்கு ஞானஸ்நானம் பெற, பெற்றோரிடம் அனுமதி பெற்றிருந்தார். தன்னால் மனமாற்றம்

அடைந்தவர்களுடன் தானும் ஒருவராக பில்லி திருமுழுக்குப் பெற்றார்!

1939இல் பாப்டிஸ்ட் சபைப் போதகராக பில்லி அபிஷேகம் செய்யப்பட்டார். 1940 மே மாதம் பிளாரிடா வேதாகப் பள்ளியில் கல்வியை முடித்துப் பட்டமும் பெற்றார்.

வீட்டன் கல்லூரி

1940இல் பில்லி கிரகாம் மானிடவியல் (Anthropology) பட்டப்படிப்புக்காக வீட்டன் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவருடைய ஊழியம் இன்னும் விரிவடைந்தது. 1941 ஜூலை யிலிருந்து, கல்லூரி மாணவரான பில்லி கிரகாம், ஐக்கிய நற்செய்தி சபையில் துணைப் போதகராகவும் பணியாற்றினார்.

ஒவ்வொரு ஞாயிறு, வெள்ளிக்கிழமை இரவும் ஜெபக் கூட்டங்களை நடத்தி வந்தார். அவருடைய பேச்சு பரிசுத்த ஆவியானவரின் அருளை முற்றிலும் பெற்றதாக அமைந்திருந்தது. அவருடைய முயற்சியால் அந்தச் சபையே புத்துயிர் பெற்று, ஆவியின் எழுப்புதலை அடைந்தது.

பில்லியின் நண்பரான கிரேடி வில்சனும் பில்லியுடன் வீட்டன் கல்லூரியிலேயே பயின்று வந்தார். பேராசிரியர் மார்ட்டி மன்லேனின் நட்புக் கிடைத்தது பில்லியின் சமுதாய நோக்கிற்கு உயிரூட்டும் விதத்தில் அமைந்திருந்தது.

பொருளாதாரம், அரசியல், நடப்புச்செய்திகள் இவற்றின் மூலம் கிறிஸ்தவ நற்செய்தியை எடுத்துக்கூறும் திறமையை பில்லி கிரகாம் பெற்றமைக்கு இவருடைய நட்பே அடிகோலியது.

திருமணம்

டாக்டர் நெல்சன் பெல் என்ற மருத்துவ நிபுணர் பதி னெட்டு ஆண்டுகளாக சீனாவில் மிஷனெரிப் பணிபுரிந்து வந்தவர். அவருடைய மகளான ரூத் பெல் வீட்டன் கல்லூரியில் பயின்று வந்தார்.

அன்பும், அடக்கமும், பழகுவதில் இனிமையும் கொண்ட ரூத்பெல், பில்லிகிரகாமின் மனதைக் கவர்ந்தார். இருவரும் நெருங்கிய நட்புறவுக் கொண்டனர்.

பில்லியின் ஊழியத்தில் ஆர்வம் காட்டி உற்சாக மூட்டி வந்தார் ரூத். ''வாழ்க்கையில் இலட்சியமும் பிடிப்பும் கொண்டவர்; தேவனிடம் அளவற்ற அன்புகொண்டவர் பில்லி'' என்று ரூத் குறிப்பிட்டுள்ளார்.

1941 கோடை காலத்தில் பெல் தம்பதியர் சீனாவிலிருந்து விடுமுறைக்காக இல்லத்துக்கு வந்திருந்தனர். அப்போது ரூத், பில்லி இவர்களின் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. என்றாலும் தேவ சித்தம் என்னவென்று தெரியாமல் ரூத் கலங்கினார்.

மேற்கு சீனாவுக்கும், திபெத்துக்கும் மிஷனெரியாகச் செல்லவேண்டுமென்பதே அவருடைய விருப்பம். ஆனால் பில்லியோ ரூத்தினால் இந்தக் கடினமான பணியைச் செய்ய முடியாது. தேவன் தன்னை வழிநடத்துகிறார். மனைவியின் கடமையோ கணவனைப் பின்பற்றுவதுதான் என்று வலி யுறுத்தினார்.

நீண்ட ஜெபத்துக்குப் பின்னர் ரூத் பில்லியின் முடிவை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார். இன்றும் பில்லி கிரகாமின் ஊழியத்தில் ஆர்வத்துடன் ஒத்துழைத்து வருகிறார் ரூத்.

1943இல் பில்லி கிரகாம் வீட்டன் கல்லூரிப் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஆகஸ்டு 13ஆம் தேதி அவருக்கும், ரூத் பெல்லுக்கும் திருமணம் இனிதே நிறைவேறியது.

டாக்டர் நெல்சன் பெல்லின் உறவினால் சபைப்பிரிவு களுக்கு மேலாக கிறிஸ்தவர் அனைவரையும் ஒன்றாக இணைத்துப் பணிபுரியும் பண்பை பில்லி கிரகாம் பெற்றார். ஊழியத்தில் ஈடுபட விரும்பும் ஒவ்வொரு விசுவாசியும் சபைப்பிரிவுகளின் போட்டா போட்டியால் பாதிக்கப்படக்கூடாது என்ற அவருடைய அறிவுரையை பில்லி கிரகாம் இன்றும் மறந்து விடவில்லை.

3

ஊழியம் துவங்கியது!

இராணுவத்தில் போதகராகப் பணிபுரிவதற்காக பில்லி கிரகாம் விண்ணப்பித்திருந்தார். ஆனால் பயிற்சி வகுப்புக்குச் செல்லுமுன்பு, கடுமையான அம்மைக்கட்டு நோய் அவரைப் பிடித்துக்கொண்டது. அவரால் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லமுடியவில்லை. இதுவும் தேவ சித்தமேயென்று கண்டு அமைதியடைந்தார் பில்லி.

முதல் சபை

கல்லூரிப் படிப்பு முடிந்த உடனேயே வெஸ்டர்ன் ஸ்பிரிங்கஸ் என்ற இடத்திலுள்ள பாப்டிஸ்ட் ஆலயமொன்றில் பில்லி போதகராகப் பணிபுரியத் துவங்கினார். பில்லியும், ரூத்தும் இளம் தம்பதியராக ஹின்ஸ்டேல் பகுதியில் புகை வண்டிப் பாதைகளுக்கு அருகே இருந்த வீட்டில் குடிபுகுந்தனர்.

சமையல் கற்றுக்கொண்டிருந்த ரூத்துக்குத் தானும் உதவி செய்தார் பில்லி. மணவாழ்வு விரிசல்கள் இன்றி ஆசீர் வாதம் பெற்றதாக அமைந்தது.

பில்லி ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்களுடன் தொடர்பு கொண்டார். சபை பெருகியது. சிறந்த பிரசங்கியார் என்று பில்லி புகழ்பெறத் தொடங்கினார். தனது இறைபணியை சபையோடு நிறுத்திவிடாமல் ஆடவர்களின் பொழுதுபோக்கு கிளப்களிலும் விரிவுபடுத்தினார்.

விரைவிலேயே பொழுதுபோக்கு கிளப் ஒன்றைச் சேர்ந்த முந்நூறுபேர் பில்லியைத் தங்கள் கூட்டமொன்றில் பேசும்படி அழைத்தார்கள். சபை அங்கத்தினர்கள் மட்டுமின்றி அனைவருடைய நன்மதிப்புக்கும் பாத்திரமானவரானார் பில்லி.

'இரவினிலே வரும் கீதம்' ('Songs in the Night')

டோரி ஜாண்சன் பில்லி கிரகாமின் நண்பர்களில் ஒருவர். பெரியதொரு சபையின் போதகரான அவர் ஒரு வானொலி நிகழ்ச்சியை நடத்திவந்தார்.

இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கும் *'கிறிஸ்துவுக்கு வாலிபர்' (Youth for Christ)* என்ற இயக்கத்தைத் துவங்கியவர் இவரே. பில்லியின் பேச்சுத் திறனை அறிந்த அவர் அந்த நிகழ்ச்சியை எடுத்து நடத்துமாறு அவரிடம் கேட்டுக் கொண்டார்.

வானொலியின் மூலம் தன்னுடைய நற்செய்திப் பணியை விரிவுபடுத்தலாம் என்ற எண்ணம் பில்லி கிரகாமுக்கு இருந்தாலும் அவரால் உடனே ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. வாரந்தோறும் நூற்றைம்பது டாலர்கள் வாடகைக் கட்டணமாக வானொலி நிலையத்துக்குக் கொடுக்க வேண்டும். அத்துடன் தயாரிப்புச் செலவுகள் வேறு!

ஆனால் பில்லியின் திறமையை அறிந்த அவருடைய சபை மக்கள் இந்தப் பணியில் உதவ முன் வந்தனர். கூடிய விரைவிலேயே ஐந்து வாரங்களுக்குத் தேவையான தொகை சேர்ந்துவிட்டது!

ஜார்ஜ் பீவர்லி ஷீ என்று பாடகர் அப்போது பிரபலம் அடைந்தவர். பில்லி கிரகாம் அவருடைய உதவியை நாடினார். *'இரவினிலே வரும் கீதம்'* 1944ஆம் வருடம் ஜனவரி மாதத்தி லிருந்து வானில் பரவ ஆரம்பித்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு 10-15லிருந்து 11 மணி வரை சிகாகோ வானொலி நிலையத்திலிருந்து இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது.

பீவர்லி ஷீயின் இசையும், அன்றாடச் செய்திகளைக் கிறிஸ்தவ முறையில் அணுகும் பில்லியின் அருளுரைகளும் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் பாராட்டைப் பெற்றன. நேயர்களிடமிருந்து கிடைத்த பண உதவி, நிகழ்ச்சி தங்கு தடையின்றி ஒழுங்காக ஒலிபரப்பப்பட வழிகோலியது. பில்லி கிராமின் புகழ் பரவ ஆரம்பித்தது.

'கிறிஸ்துவுக்கு வாலிபர்' இயக்கம்

இளைஞர்களிடையே நற்செய்தியைப் பரப்புவதில் மிகவும் ஆர்வம் கொண்டவர் டோரி ஜாண்சன். சிகாகோ நகரின் ஒரு முக்கியமான இடத்திலிருந்த இசையரங்கு ஒன்றை வாடகைக்கு எடுத்து மாபெரும் கூட்டத்தொடர் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

ஒவ்வொரு சனிக்கிழமை இரவுமாக, இருபத்தொரு வாரங்கள் இக்கூட்டங்கள் நடைபெற்றன. 1944 மே 20இல் துவங்கிய முதல் கூட்டத்தில் இளைஞரான பில்லியைப் பேசும்படி அழைத்தார் ஜாண்சன்.

ஆலயங்களிலேயே பேசிப் பழகிய பில்லிக்கு, முதன்முதலாக மாபெரும் கூட்டமொன்றில் பேசத் தயக்கமாக இருந்தது. "என்னுடைய வாழ்நாளிலேயே அன்றுபோல் என்றும் தயக்கம் கொண்டது கிடையாது" என்று பில்லி குறிப்பிட்டுள் ளார்.

இராணுவத்தில் பணிபுரியும் சுமார் 2,800 இளைஞர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தொண்டை வறள, நடுக்கத்துடன் அருளுரையை ஆரம்பித்த பில்லி, விரைவிலேயே ஆவியான வரின் பிரசன்னத்தை உணர்ந்தார். கடின மனம் கொண்ட அந்த இளைஞர்களையும் உருக வைக்கும்வண்ணம் அருளுரை அமைந்தது.

தேவ கிருபையால் அந்த முதல் கூட்டத்திலேயே 42 இளைஞர்கள் மனம்திரும்பினர். தயக்கம் நீங்கப்பெற்ற பில்லி அடுத்து நடந்த கூட்டங்களில் வல்லமையுடன் அருளுரை

பொழிந்தார். இருபத்தோராவது, கடைசிச் சனிக்கிழமை கூட்டத்திற்கு சுமார் இருபதினாயிரம் பேர் வந்திருந்தார்கள்!

இந்தக் கூட்டங்களின் பலனை உணர்த்த ஜான்சன் ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் இளைஞர் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு இடத்திலும் பில்லியின் பேச்சைக் கேட்டுப் பல இளைஞர் மனம்திரும்பினர்.

பிளாரிடாவிலுள்ள மியாமி நகரில் கூட்டம் நடக்கும் போது, ஜாண்சன் இந்தக் கூட்டங்களை ஒரு இயக்கமாகவே நடத்தும்படி தீர்மானித்தார். *'கிறிஸ்துவுக்கு வாலிபர்'* இயக்கம் உருவாயிற்று. பில்லி கிரகாம் அந்த இயக்கத்தின் நற்செய்திப் பணியாளராக நியமிக்கப்பட்டார்.

காதுக்கு இதமளிக்கும் இனிய இசையுடன் இளைஞர்களைக் கவரும் வண்ணம் அருளுரைகள் வழங்கப் பட்டன. ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் *'கிறிஸ்துவுக்கு வாலிபர்'* இரவு என்று கூறுமளவுக்கு இயக்கம் பரவியது. இரண்டாண்டுகளுக்குள் பில்லி கிரகாம் அமெரிக்கா, கனடா இரண்டு நாடுகளையும் சுற்றி வந்துவிட்டார்!

இதற்கிடையில் பில்லி, ரூத் தம்பதியரின் முதல் குழந்தை வர்ஜீனியா, 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி பிறந்தாள்.

தனது பெற்றோருடன் தங்கியிருந்த ரூத், தன்னுடைய கணவர் வீட்டை விட்டுவிட்டு நாடெங்கிலும் அலைந்து பணி செய்து வந்ததை முழுவதுமாக ஆதரித்ததால், எந்தவிதக் கவலையுமின்றி பில்லியால் நற்செய்திப் பணியைத் தொடர முடிந்தது.

இங்கிலாந்தில் பில்லி கிரகாம்

டாம் ரீஸ் என்பவரின் முயற்சியால் *'கிறிஸ்துவுக்கு வாலிபர்'* இயக்கம் இங்கிலாந்திலும் பரவியிருந்தது. அவருடைய

அழைப்பை ஏற்றுக்கொண்டு ஐவர் அடங்கிய குழு 1946 மார்ச்சு 18 ஆம் நாள் இங்கிலாந்துக்குப் புறப்பட்டது.

டோரி ஜாண்சன், பில்லி கிரகாம், பாடகர் ஸ்ட்ராட்டன், முன்னாள் கேலிச் சித்திரக்காரர் சார்லஸ் டெம்பிள்டன், நிருபர் வெஸ்லி ஐவரும் மான்செஸ்டர் நகரை அடைந்தனர்.

மார்ச்சு 24 அன்று நடைபெற்ற முதல் நற்செய்திக் கூட்டத்திலேயே ஐம்பது பேர் மனம்திரும்பினர். மனம்திரும்பிய

துவக்ககால நற்செய்திக் குழுவினர்
(அமர்ந்திருப்பவர்கள் : பீவர்லி ஷீ, பில்லி கிரகாம், கிளிப் பாரோஸ்)

ஒரு இராணுவ வீரர், தான் அப்போதுதான் முதன்முதலாக நற்செய்தியைக் கேட்டிருப்பதாகக் கூறினாராம்!

மான்செஸ்டர் கூட்டத்திற்குப் பின்னர் நாடெங்கிலும் பல இளைஞர் கூட்டங்களை நடத்தினார்கள். இளைஞர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் ஏற்றபடி நற்செய்திக்கூட்டங்களை நடத்த வேண்டுமென்று பில்லி கிரகாம் விருப்பப்பட்டார்.

கிளிப் பாரோஸ்

இருபத்திரண்டு வயதே நிரம்பிய கிளிப் பாரோஸ் ஒரு திறமை வாய்ந்த பாடகர். பாப்டிஸ்ட் சபையின் போதகராகவும் அபிஷேகம் செய்யப் பெற்றிருந்தார். அவருடைய மனைவி பில்லி பியானோ வாசிப்பதில் கைதேர்ந்தவர். இவர்களுடைய இசைத் திறமையை உணர்ந்த பில்லி கிரகாம், கிளிப் பாரோஸை தம்முடைய குழுவில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார்.

இன்றும் பில்லி கிரகாம் குழுவில் இவர் பாடல் பகுதித் தலைவராகவும், வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவராகவும் நற்பணியாற்றி வருகிறார்.

மீண்டும் இங்கிலாந்து!

1946 அக்டோபர் மாதத்தில் பில்லி, பாரோஸ் தம்பதியருடன் இங்கிலாந்துக்குப் பயணமானார். 1947ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய 27 நகரங்களில் 360 இளைஞர் கூட்டங்களை நடத்தினார்கள். 1947 மார்ச்சு மாதம் பர்மிங்காம் நகரில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இளைஞர் பணியில் ஈடுபட்டுள்ள 250 தலைவர்களுக்குப் பயிற்சியளித்தனர்.

பில்லி கிரகாமின் அருளுரைகள் உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்திருந்ததைக் கண்ட மக்கள் அவர் உண்மையாகவே ஆவியானவரின் அருளைப்பெற்றவர் என்று உணர்ந்து கொண்டார்கள்.

விடைபெறும்போது இளைஞர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்குமாக நற்செய்திக் கூட்டங்களை நடத்தும்படி மீண்டும் இங்கிலாந்துக்கு வர வேண்டுமென்று பில்லியைக் கேட்டுக்கொண்டார்கள்.

நார்த் வெஸ்டர்ன் பள்ளிகள்

எண்பத்து நான்கு வயது நிரம்பிய டாக்டர் ரிலே, நார்த் வெஸ்டர்ன் பள்ளிகளை உருவாக்கி நிர்வகித்து வந்தார். பில்லியின் அருளுரையைக் கேட்ட அவர், தனக்குப்பின் தலைவராக இருப்பதற்கு ஏற்றவர் அவரே என்று தீர்மானித்தார்.

கிரேடி வில்சன் (1919–1987)

வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தைப் படுக்கையில் கழித்துக் கொண்டிருந்த ரிலேயின் வேண்டுகோளுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் பில்லி கிரகாம் திகைத்தார்.

ரூத் அம்மையாரோ பில்லி பள்ளித் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டால் நற்செய்திப் பணிக்கு இடையூறு வரும் என்று கூறி எச்சரித்தார். இறுதியில் அடுத்த தலைவர் தேர்ந் தெடுக்கப்படும் வரையில் தற்காலிகத் தலைவராகப் பணியாற்ற பில்லி கிரகாம் சம்மதித்தார்.

முதல் எழுப்புதல் கூட்டங்கள்

பில்லியின் நண்பரான கிரேடி வில்சன் பில்லியின் குழு வில் ஒருவராகச் சேர்ந்து கொண்டார். 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதன்முறையாக பில்லி, பாரோஸ், பீவர்லி ஷ, கிரேடி வில்சன் நால்வரும் சேர்ந்து சார்லெட் நகரில் மூன்று வாரங்கள் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார்கள். தொடர்ந்து மற்ற நகரங்களிலும் எழுப்புதல் கூட்டங்கள் நடைபெற்றன.

நார்த் வெஸ்டர்ன் பள்ளிகளின் தலைவர்

இதற்கிடையே டிசம்பர் ஏழாம் `தேதி ரிலே மரணமடைந் தார். நிர்வாகக் குழுவின் வேண்டுகோளின்படி பில்லி கிரகாம் பள்ளித் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

1948இல் சுமார் எண்ணூறு மாணவர்களைக் கொண்ட அந்தப் பள்ளியை நிர்வகிப்பதில் பல இடையூறுகள் எழும்பின. அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்து வந்தார் பில்லி. இந்த அனுபவங்கள் அவருடைய முன்னேற்றத்திற்கும் படிக்கட்டு களாக விளங்கின.

வீட்டன் கல்லூரியைப் போன்று இந்தப் பள்ளியையும் சிறப்புறச் செய்ய அரும்பாடுபட்டார். மாணவர்களை நற்செய்திப் பணிசெய்ய ஊக்குவிப்பது மட்டுமின்றி, தானே நற்செய்திப் பணி செய்து காட்டினார்.



அகஸ்டா எழுப்புதல் கூட்டத்தில் (1948) பில்லி கிரகாம் பேசுகிறார்

பள்ளியின் நிர்வாகியாகப் பணியாற்றியதால் பண நிர்வாகம், பொது ஜனத்தொடர்பு, அலுவலக நிர்வாகம், பொறுப்புடன் செயல்படுவது இவற்றில் அவர் பெற்ற அனுபவங்கள் பின்னர் பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவைச் சிறப்பாக நிர்வகிக்க அவருக்கு உதவி செய்தன.

பள்ளித் தலைவராகப் பணியாற்றினாலும் நற்செய்திப் பணியை பில்லி கிரகாம் விட்டுவிடவில்லை. 1948ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சுவிட்சர்லாந்தில் பீட்டன்பர்க் நகரத்தில் கூடிய முதல் கிறிஸ்தவ இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

27 நாடுகளிலிருந்து நானூறுக்கும் மேற்பட்டோர் வந்திருந்தனர். அவர்களுடன் கலந்துறவாடி அயல்நாடுகளில் கிறிஸ்தவர்களின் நிலையைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டார்.

நால்வர் குழுவின் எழுப்புதல் கூட்டங்கள் நகரங்கள் தோறும் பரவ ஆரம்பித்தன. தனியொரு குழு கூட்டங்களை நடத்தினாலும் நகரிலுள்ள சபைகள் அனைத்தும் ஒத்துழைத் தால்தான் கூட்டங்கள் சிறப்பாக அமையும் என்ற கருத்தை யுடையவர் பில்லி கிரகாம். அவர் என்றுமே சபைப் போதகர்களைப் பற்றிக் குறை கூறுவதே கிடையாது.

1948 அக்டோபர் மாதத்தில் அகஸ்டா நகரில் நடந்த எழுப்புதல் கூட்டத்தில் முதல்முறையாக உள்ளூர் சபைகளும் பங்குகொண்டது பில்லியின் நற்செய்தி இயக்கத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இறையருளை எண்ணித் துதித்தார் அவர்!

பெரிய நகரங்களில் இலட்சக்கணக்கானோரின் உள்ளத்தைத் தொடும் வல்லமை வாய்ந்த எழுப்புதல் கூட்டங்களை நடத்த வேண்டுமென்ற அவா பில்லி கிரகாம் குழுவினருக்கு இருந்தது. அந்த வேளைக்காக இடைவிடாமல் ஜெபித்து வந்தனர்.

4

வல்லமையோடு பரவிய ஊழியம்

"வேதாகமத்திலுள்ள அனைத்துச் செய்திகளும் உண்மைதானா?" பில்லி கிரகாமின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிதான் அவருக்கு இந்தச் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.

சியர்ரா நெவாடாவில் நடைபெற்ற ஓர் இளைஞர் கூட்டத்தில் அருளுரையாற்றினார் பில்லி. பலவிதச் சிந்தனை களால் தங்கள் விசுவாச ஜீவியத்தில் குழம்பிப் போயிருந்த இளைஞர்களுக்கு அவருடைய வார்த்தைகள் ஆறுதலளித்தன.

ஆனால் இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு முதிய போதகர், "பாவம் பில்லி. வேதாகமத்தை வார்த்தைக்கு வார்த்தை பின்பற்றிப் பேசுகிறார். இதனால் பயன் ஒன்றும் விளையப்போவதில்லை. இன்றைய இளைஞர்கள் இதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று கூறினாராம். இதைக் கேள்விப்பட்ட பில்லி கிரகாம் திடுக்கிட்டார்.

நேரே தன்னுடைய அறைக்குச் சென்றார். வேதாகமம் கையில் இருக்க, முழங்காற்படியிட்டு, கண்ணீருடன் ஜெபித்தார். "தேவனே, நான் நினைத்தது தவறானதா? வேதாகமம் உம்முடைய வார்த்தைகள் இல்லையா? ஒருசிலர் கூறுகிறபடி மனிதரால் எழுதப்பட்ட வரலாறுதானா? சொல்லும் ஆண்டவரே" என்று உருக்கமுடன் வேண்டினார்.

லாஸ் ஏஞ்சலிஸ் எழுப்புதல் கூட்டம் (1949) நடைபெற்ற அரங்கம்

அப்போது ஆவியின் அனல் அவருக்குள் பிரவேசித்தது. சொல்லமுடியாத அளவு சமாதானம் அவரை ஆட்கொண்டது. "ஆம், ஆண்டவரே, உம்முடைய வேதம் உண்மையானது என்று உணர்ந்து கொண்டேன். மனித சமுதாயத்துக்கு நீர் அளித்த இந்த வார்த்தைகளை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்."

ஜெபித்து முடித்தவுடன் பில்லி கிரகாம் ஒரு புது வல்லமையை அனுபவித்தார். அன்று முதல் அவருடைய அருளுரைகள் அதிகாரம் பெற்று விளங்கின. வேதாகமம் அவருடைய கையில் ஒளிவீசும் சுத்தியலாகப் பிரகாசித்தது. மாபெரும் எழுப்புதல் கூட்டங்களைத் துணிவுடன் நடத்தும் வேளை வந்துவிட்டதை பில்லி உணர்ந்தார்.

லாஸ் ஏஞ்சலிஸ் எழுப்புதல் கூட்டம்

ஒன்பது மாத காலமாக லாஸ் ஏஞ்சலிஸ் நகர வணிகர்கள் ஒன்று கூடி எழுப்புதலுக்காக ஜெபித்து வந்தனர். ஒவ்வொரு ஆலயத்திலும் ஜெபக் குழுக்களை அமைத்தனர். நாள் முழுவதும் இருபத்துநான்கு மணி நேரமும் விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்பட்டன.

வணிகர்கள் தங்கள் தீர்மானத்தின்படி, பில்லி கிரகாம் குழுவினரை இரண்டு மாத காலத்திற்கு மாபெரும் எழுப்புதல் கூட்டங்களை நடத்தும்படி வேண்டிக்கொண்டனர்.

1949ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சலிஸிலும், அதைச் சுற்றிலுமுள்ள 700 சபைகள் பங்குகொண்ட இந்த மாபெரும் கூட்டம் ஒரு கூடாரத்தில் நடைபெற்றது. மொத்தம் 3,50,000 பேர் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் மனந்திரும்பி ஆலோசனைகள் பெற்றனர்!

சபைகளில் அங்கத்தினர் எண்ணிக்கை பெருகியது. நகர் முழுவதுமே நற்செய்தியின் வல்லமையை உணர்ந்தது. இறுதி நாளான நவம்பர் 20 அன்று சுமார் பத்தாயிரம் பேர் அந்தக் கூடாரத்தின் கூடி தேவனைத் துதித்தார்கள்.

சினிமா படங்கள் எடுப்பதில் புகழ்பெற்ற ஹாலிவுட் நகரம், லாஸ் ஏஞ்சலிஸில் ஒரு பகுதியே. மாய உலகமான சினிமா துறையில் உள்ளங்களைப் பறிகொடுத்திருந்த அநேகர் மனம் திரும்பினார்கள். குடிகாரர்களும், விலைமகளிரும் இறைவனின் இலவச மன்னிப்பை ருசித்தார்கள்.

விவாகரத்தினால் சிதைந்திருந்த குடும்பங்கள் ஒன்றாகி இறைவனைத் துதித்தன. "வானமே திறந்து, தேவனே அக் கூட்டங்களை நடத்தியதுபோன்று உணர்ந்தோம்" என்று ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல தொலைக்காட்சி நட்சத்திரங்களும், கொள்ளைக் காரர்களும் விளையாட்டு வீரர்களும் மனம்திரும்பியது பலரும் நற்செய்தியின் வல்லமையை உணர்ந்துகொள்ளுமாறு செய்தது.

ஸ்டுவோர்ட் ஹாம்ளன் என்பவர் வானொலிமூலம் புகழ் பெற்றவர். குடிகாரரும், சூதாட்டக்காரருமான அவர் பில்லி கிரகாமின் புகழை அறிந்து, பில்லியின் கூட்டத்திற்குச் செல்லுமாறு வானொலிமூலம் தன்னுடைய இரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். தானும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

"இந்தக் கூடாரத்தில் ஒருவர் இரட்டை வாழ்க்கை வாழ்கிறார்" என்று அருளுரையின்போது பில்லி சுட்டிக் காட்டியது தன்னைத்தான் என்று நினைத்து ஸ்டுவோர்ட் கோபம் கொண்டார். அடுத்தநாள் கூட்டத்திற்கு வராமல் வேட்டைக்குச் சென்றுவிட்டார். ஆனால் மனப்போராட்டத்தைத் தாங்க முடியாமல் மீண்டும் கூட்டத்திற்கு வந்தார்.

போலியான கிறிஸ்தவர்களுக்கு, பில்லி கிரகாம் விடுத்த எச்சரிப்பைக் கேட்டுக் கோபமடைந்து, கூட்டத்தின் நடுவிலேயே எழுந்து வெளியே சென்றார். மன அமைதிக்காக மதுக் கூடத்திற்குச் சென்று நிம்மதி கிடைக்கவில்லை. அன்று இரவு அவரால் தூங்கமுடியவில்லை!

நள்ளிரவில் மனைவியை எழுப்பித் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டு தானும் ஜெபித்தார். இரவு இரண்டு மணிக்குத் தொலைபேசி மூலம் பில்லியிடம் அனுமதி கேட்டு, அவருடைய அறைக்குச் சென்றார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, கெட்ட பழக்கங்களை விட்டுவிட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார் பில்லி.

தன்னுடைய பாவங்களை உணர்ந்த ஹாம்ளன் கண்ணீர் விட்டு ஜெபித்தார், இரட்சிப்படைந்தார். உடனே டெக்ஸாசி லிருந்த தன் அன்னையுடன் தொடர்புகொண்டார். மகன் மனம் திரும்பிய செய்தியைக் கேட்டுத் தாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்!

தான் மனம் திரும்பிய செய்தியை ஹாம்ளன் தனது வானொலி நிகழ்ச்சி மூலம் அறிவித்தார். அதைக் கேட்ட மேலும் பலர் கூட்டங்களுக்கு வர ஆரம்பித்தனர். ஜிம் வாஸ் என்ற திருடர் பலமுறை சிறைக்குச் சென்றவர். ஒரு மாபெரும் கொள்ளைத் திட்டத்திற்கான முன்னேற்பாடுகளைக் கவனித்து விட்டுத் திரும்பி வரும்போது, கார் ரேடியோவின் மூலம் ஹாம்ளன் அளித்த செய்தியைக் கேட்டார்.

உள்ளுணர்வால் உந்தப்பட்டு மறுநாள் மனைவியுடன் கூட்டத்துக்குச் சென்றார். அவருடைய உள்ளம் உடைந்தது. மனம் திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். இந்தச் செய்தி பத்திரிகைகளுக்கு முக்கிய செய்தியாக அமைந்தது.

லூயி ஜாம்பெரினி என்ற ஒலிம்பிக் விளையாட்டு வீரரும் பில்லியின் அருளுரையைக் கேட்டு மனம்திரும்பினார். இவ்வாறு லாஸ் ஏஞ்சலிஸ் எழுப்புதல் கூட்டம் பல்லாயிரக் கணக்கானோருக்கு வழிகாட்டுமாறு தேவன் ஆசீர்வதித்தார்.

பாஸ்டன் நகர்

லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் எழும்பிய எழுப்புதல் தீ விரைவில் அமெரிக்க நாடெங்கும் பரவ ஆரம்பித்தது. இரண்டாம் உலகப்

போரின் பின்விளைவுகளினாலும், பொருளாதார பிரச்சினை களினாலும் திகைத்து நின்ற அமெரிக்க மக்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தி புத்துணர்வூட்டியது.

1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எழுப்புதல் கூட்டம், ஜெப வல்லமையின் பக்க பலத்துடன், பாஸ்டன் நகரில் நடை பெற்றது. பார்க்ஸ்ட்ரீட் ஆலயத்தின் போதகர் ஹெரால்ட் ஒகங்கா அவர்கள் தனது ஆலயத்தில் கூட்டங்களை நடத்துவதற்கு வசதி செய்து கொடுத்தார். புது வருட தினத்தன்று மழையையும் பொருட்படுத்தாமல் அநேகர் பங்கு கொண்டனர்.

கூட்ட மிகுதியால், ஆலயத்தில் இடம் போதாமையால், 'பாஸ்டன் கார்டன்' என்ற இடத்தை வாடகைக்கு எடுத்து கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர். இறுதி நாளான ஜனுவரி 16 அன்று 16,000 பேர் வந்திருந்தனர்.

அவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் மனம் திரும்பினர். எழுப்புதல் அக்கினி பரவுவதைக் கண்டு, நாடெங்கிலு மிருந்து பல நகரங்களில் கூட்டங்கள் நடத்துமாறு பில்லிக்கு வேண்டுகோள்கள் வந்து குவிந்தன.

கொலம்பியா நகரம்

எழுப்புதல் கூட்டங்களை அமைத்து நிர்வகிப்பதில் அனுபவம் கொண்ட வில்லிஸ் ஹேமேக்கர், கொலம்பியா நகர எழுப்புதல் கூட்டத்திலிருந்து பில்லி கிரகாமின் குழுவினரில் ஒருவரானார். ஆவியின் மழை பொழியவேண்டி பல ஜெபக் கூட்டங்களை அமைத்தார் இவர்.

எழுப்புதல் கூட்டம், சிலுவைப் போராட்டம் (crusade) என்ற பெயரில் அழைக்கப்பட்டது. கூட்டங்களில் மனந் திரும்பியவர்களுக்கு ஆலோசனைகள் கூறப்பட்டன. நற்செய்தி நூல்களும் துணை நூல்களும் அளிக்கப்பட்டன.

அவர்கள் அருகிலிருக்கும் சபையில் பங்கு வகிக்கும்படி ஊக்குவிக்கப்பட்டனர். அவர்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப் பட்டன. இதனால் மனந்திரும்பியவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் செல்வது சுலபமாக இருந்தது.

கொலம்பியா எழுப்புதல் கூட்டம் இரண்டு பெரும் முன் னேற்றங்களைப் பில்லியின் குழுவுக்கு அளித்தது. முதன் முறையாக மாநில ஆளுநர் எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவருடைய முயற்சியால் சட்டசபையில் பேசும் வாய்ப்பும் கிடைத்தது!

சமுதாயத்தில் ஒரு பிரிவினரான இவர்களுக்கும் அருளுரையளிக்கக் கிடைத்த பாக்கியத்துக்காக பில்லி தேவனைத் துதித்தார். இது மட்டுமின்றி பிரபலமான 'டைம்', 'லைப்' பத்திரிகைகளின் அதிபரான ஹென்ரி ஆர். லூஸ் என்பவர் பில்லி கிரகாமின் அருளுரையைக் கேட்டு வியந்தார். அவருடைய பத்திரிகைகள்மூலம் கூட்ட நிகழ்ச்சிகளைச் செய்திகளாக அறிவிக்கும்படி செய்தார்.

பல தினசரி இதழ்கள் பில்லி கிரகாமின் முழு அருளுரை யையும் பிரசுரிக்க ஆரம்பித்தன. நற்செய்தியானது செய்தி முக்கியத்துவம் பெறும்போது, உலகப்பிரகாரமான பத்திரிகைகள் மூலம்கூட அது பரப்பப்பட முடியும் என்பதை பில்லி கிரகாம் அப்போது உணர்ந்துகொண்டார்.

கொலம்பியா எழுப்புதல் கூட்டத்தின் கடைசி நாளான மார்ச்சு 12ஆம் நாளை 'தென் கரோலினா மாநில எழுப்புதல் நாளாக' ஆளுநர் அறிவித்தது ஒரு தெய்வச்செயல்! சுமார் 40,000 பேர் வந்திருந்தனர். அந்த ஒரு நாளில் மட்டுமே 9,000 பேர் மனம்திரும்பினர்! கொலம்பியாவின் சபைகள் பெருகி வந்ததினால் பல ஆலயக் கட்டிடங்களை விரிவுபடுத்த நேரிட்டது!

கொலம்பியாவைத் தொடர்ந்து, அமெரிக்காவெங்கும் பல நகரங்களில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினர்.

1950ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் நாள், அதிபர் ட்ரூமனின் அழைப்பின்பேரில், பில்லி கிரகாம் வெள்ளை மாளிகைக்குச் சென்று ஜெபக்கூட்டம் நடத்தினார். அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு அமெரிக்க அதிபரும் பில்லி கிரகாமின் நட்புறவைப் பெற்றுள்ளது தேவன் அளித்த பாக்கியமே!

வாஷிங்டன் எழுப்புதல் கூட்டம்

1952இல் வாஷிங்டனில் நடத்தப்பட்ட எழுப்புதல் கூட்டத்தின் நிகழ்ச்சிகள் முதன்முதலாக நாடெங்கிலும், வானொலி, தொலைக்காட்சி மூலம் ஒலி, ஒளி பரப்பப்பட்டன. பல தேசிய சபை உறுப்பினர்கள் நண்பர்களாயினர். அவர்களில் நிக்சனும், ஜாண்சனும் முக்கியமானவர்கள்.

1952ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 25ஆம் நாளன்று நார்த் வெஸ்டர்ன் பள்ளிகளின் தலைவர் பதவியை பில்லி கிரகாம் இராஜினாமா செய்துவிட்டார். இதனால் மென்மேலும் நற்செய்திப் பணியில் ஈடுபட வசதியாக இருந்தது.

கொரியப் போர்முனையில் பில்லி!

1952இல் நடைபெற்றுக் கொண்டிருந்த கொரியப் போரில் அதற்குள்ளாக 21,000 அமெரிக்கப் போர்வீரர்கள் மாண்டிருந்தனர். பல கிறிஸ்தவ மிஷனரிகளும், ஊழியர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

கிறிஸ்மஸ் தினத்தைப் போர்முனையில் கழித்தார் பில்லி. போர்க்குண்டுகளின் பின்னணியில் நற்செய்தியைப் பிரசங்கித்தார். காயமடைந்து துடித்த போர்வீரர்களுக்கு அவருடைய வார்த்தைகள் சமய சஞ்சீவியாக ஆறுதலளித்தன. மனிதனின் அவல நிலையையும், துன்பத்தையும் கண்டு இரக்கம் கொண்டார். இன்றும் அவருடைய அருளுரைகளில் இரக்க உணர்வு பிரதிபலிப்பதைக் காணலாம்.

யுத்தத்தின் விளைவாக இடிபாடான நிலையிலிருந்த ஆலயங்களையும், அனாதைசாலைகளையும், வைத்திய சாலைகளையும் கண்டு கண்ணீர்விட்ட பில்லி கிரகாம், வெளி நாட்டு அருட்பணி ஊழியத்தை மென்மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் அமெரிக்காவுக்குத் திரும்பினார்.

அதிபர் ஐஸன்ஹோவர்

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அதிபர் ஐஸன் ஹோவரின் அழைப்பின்பேரில் 1953 ஜனவரியில் அவரைச் சந்தித்தார் பில்லி கிரகாம். தேசத்தின் எழுப்புதலுக்காக இருவரும் ஜெபித்தனர். புதிய அதிபர் தமது பதவியேற்பு உரையில் வேத வசனங்களைப் பயன்படுத்துமாறு பில்லி ஊக்குவித்தார்.

ஐஸன்ஹோவர் தனது பதவியேற்பு வைபவத்தில், வேத வசனங்களை எடுத்துக்கூறி உரையாற்றியதோடு மட்டுமின்றி, இதுவரை எந்த அதிபரும் செய்யாத விதமாக உரையை ஜெபத்துடன் முடித்து உலக மக்களையே வியப்பில் மூழ்கடித்து விட்டார்!

புத்துணர்வு பெற்ற அமெரிக்க நாடு

1953ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக இருபது இடங்களில் பில்லி கிரகாம் மாபெரும் எழுப்புதல் கூட்டங்களை நடத்திவிட்டார். இதன் விளைவாக மது விற்பனை 40 சதவிகிதம் குறைந்தது. வேதாகம விற்பனை மூன்று மடங்காகியது!

விவாகரத்துகள் ஒழிந்தன. பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேர்ந்தன. அரசாங்கத்திற்குச் செலுத்தப்படாமல் மறைக்கப்பட்ட வரிகள் செலுத்தப்பட்டன. துர்நடக்கைகள் குறைந்தன.

எண்ணற்றோர் கவலை நீங்கி, உற்சாகமாக ஆலய ஆராதனைகளில் பங்குகொண்டனர். அமெரிக்க நாடே புத்துணர்வு பெற்று விளங்கியது!

5

எங்கும் பரவிய எழுப்புதல்!

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங். 37:5). இலண்டன் மாநகரில் ஒரு மாபெரும் நற்செய்திக் கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்த வேளையில், பிரச்சினைகளை எதிர்நோக்க முடியாமல், பில்லி கிரகாம் தளர்ந்திருந்த வேளையில் இந்தத் தேவ வாக்குத்தத்தம் அவருக்கு உற்சாகமூட்டியது. ஜெபத்துடன் அந்தப் பிரச்சினைகளைச் சந்திக்கத் துணிந்துவிட்டார் ஜெபவீரனான பில்லி கிரகாம்!

இங்கிலாந்திலுள்ள 'சுவிசேட இணைப்புக் குழு' 1954 மார்ச்சு முதலாம் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கு இலண்டன் நகரில் ஒரு மாபெரும் எழுப்புதல் கூட்டத்தை நடத்துமாறு, பில்லி கிரகாமுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

உலகெங்கும் மூவாயிரம் ஜெபக் குழுக்கள் இலண்டன் மாநகர எழுப்புதலுக்காக ஜெபித்து வந்தன. அதிபர் ஐஸன் ஹோவர்கூட பில்லிக்காக ஜெபிப்பதாக வாக்களித்திருந்தார்.

ஆனால் பிரிட்டிஷ் சபைகளோ இதற்கு நேர் எதிர்மாறான நிலையில் இருந்தன. ஒரு பிரிட்டிஷ் பேராயர் பில்லி கிரகாம் இலண்டனுக்கு வந்தால் வாலைச் சுருட்டிக்கொண்டு திரும்பிச் செல்ல வேண்டி நேரிடும் என்று எச்சரித்திருந்தாராம்!

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் எதிர்ப்பையே அளித்தன. அரசியல்வாதிகள் சந்தேகக் கண்ணுடன் நோக்கினார்கள். பில்லி கிரகாம் மக்களையே அமெரிக்காவின் பழக்க வழக்கங் களுக்குத் திருப்பிவிடுவார் என்ற தவறான அச்சமே இதற்கெல்லாம் காரணம்!

இலண்டன் மாநகர எழுப்புதல்

தேவ வாக்குத்தத்தம் தந்த உற்சாகத்துடன், இலண்டன் மாநகரை அடைந்தார் பில்லி கிரகாம். அவருடன் அவருடைய குழுவினரும், ரூத் அம்மையாரும் சென்றிருந்தனர். நற்செய்தியில் ஆர்வமுள்ள மக்களால் இலண்டன் நகரில், பில்லிக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைக் கண்டு ஆச்சரியமுற்ற பத்திரிகை நிருபர்கள் பில்லியைக் கேள்விக் கணையினால் துளைத்தெடுத்தனர். புன்னகை மாறாத முகத்துடன், அமைதியான குரலில் ஆனால் புத்திசாலித்தனமாகப் பதில்கூறி, பில்லி கிரகாம் அவர்களை வியப்படையச் செய்தார்.

எழுப்புதல் கூட்டம், மார்ச்சு முதலாம் நாள், ஹாரிங்கே அரங்கில் துவங்கியது. இந்த அரங்கு குதிரைப் பந்தயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட அரங்காகும்! கடுமையான குளிரையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருந் தனர். யோவான் 3:16 வசனத்தைக் கொண்டு எழுப்புதலான அருளுரையாற்றினார் பில்லி.

முதல் கூட்டத்திலேயே 178 பேர் மனம்திரும்பினர். அவர்களுக்கு ஆலோசனை அளிப்பதற்காக ஏற்கனவே பலர் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர். மனம்திரும்பிய மக்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் வழிநடத்தப்பட்டனர்.

நாட்கள் செல்லச் செல்ல கூட்டம் அதிகரித்து சில நாட்கள் பில்லி கிரகாம் தொடர்ந்து மூன்றுமுறைகூட

அருளுரையாற்ற நேரிட்டது. இலண்டன் மாநகரெங்கும் எழுப்புதல் அலை அலையாகப் பரவியது!

எப்போதுமே தங்கள் உணர்ச்சிகளை வெளியே காட்டாத பிரிட்டிஷ் மக்கள்கூட பஸ்களிலும், சுரங்கப்பாதையிலும் நற்செய்திப் பாடல்களைப் பாடிக்கொண்டே சென்றனர்! எங்கும் சிரித்த முகங்கள்! இவ்வளவு மகிழ்ச்சியான மக்களைத் தாம் என்றுமே கண்டதில்லை என்று ஒரு முதியவர் குறிப்பிட்டார். இரட்சிப்பின் சந்தோஷம் அல்லவா இது?

மார்ச்சு மாதம் முடிவடைவதற்குள்ளாக எதிர்ப்புகள் அகன்றன. பத்திரிகைகள் ஆதரவளிக்கத் துவங்கின. எளிமையான ஆனால் அதிகாரமுள்ள தொனியில் பில்லி கிரகாம் நற்செய்தி அறிவித்தமை பிரிட்டிஷ் மக்களைக் கவர்ந்தது.

“நான் ஒருவ!னே கூட்டத்தில் இருப்பதுபோல் உணர்ந்தேன். நற்செய்தி எனக்காகவே கூறப்பட்டுள்ளது போல் தோன்றியது” என்று அநேகர் சாட்சி பகர்ந்தனர். மனந் திரும்பியவர்களில் இளைஞர்கள் அதிக அளவில் இருப்பதைக் கண்டு பில்லி கிரகாம் தேவனைத் துதித்தார்.

ஜேப்படி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் கூட்டத்திற்குச் சென்றிருந்த ஒருவன், அருகிலிருந்த ஒருவருடைய பர்சைத் திருடிவிட்டான். ஆனால் நற்செய்தி அவனுடைய உள்ளத்தைத் தொட்டு, அவனை மாற்றியது. மனம் திரும்பியவனாக அவன் முன்னே சென்று முழங்காற்படியிட்ட போது, அவன் யாரிடம் பர்சைத் திருடினானே அந்த நபர் அருகிலேயே முழங்காலில் நின்றிருந்தார்.

அவரிடம் அந்தப் பர்சைக் கொடுத்துவிட்டு, “ஐயா, இதோ உங்கள் பர்ஸ், என்னை மன்னித்துவிடுங்கள்” என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். மன மகிழ்ச்சியுடன் எழுந்து செல்லும் அவனைக் கண்டு. தேவனைத் துதித்தார் பர்சின் சொந்தக்காரர்!



இலண்டன் எழுப்புதல் கூட்டத்தில் (1954)
பில்லி கிரகாம் பேசுகிறார்

ஏப்ரல் மாதத் துவக்கத்திலிருந்து பில்லி கிரகாமின் அருளுரைகள் வானொலிமூலம் ஒரே சமயத்தில் நாடெங்கும் கேட்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இலண்டன் நகரில் எழுப்புதல் கூட்டம் நடைபெறும்போது, நாடு நெடுகிலும் மக்கள் ஆலயங்களிலும், அரங்குகளிலும் குழுமி பில்லியின் அருளுரையைக் கேட்டனர். அறிவியல் முன்னேற்றம் நற்செய்தியின் பரவலுக்கு உதவியது!

மே மாதம் 22ஆம் நாள் இறுதிக் கூட்டம் இலண்டன் மாநகரின் மிகப் பெரிய விளையாட்டு அரங்கமான 'வெம்ப்லி' அரங்கில் நடைபெற்றது. அந்த அரங்கிலும், அருகிலிருந்த 'ஒயிட்சிடி' அரங்கிலுமாக சுமார் இரண்டு இலட்சம் மக்கள் கூடியிருந்தனர். காண்டர்பரி பேராயரும் கூட்டத்திற்கு வந்து பில்லியை ஆசீர்வதித்தார். இயற்கை மழையோடு, ஆவியின் மழையும் பொழிய அன்று மட்டுமே நான்காயிரம் பேர் இரட்சிப்படைந்தனர்!

பிரதமர் சர்ச்சில்

மே மாதம் 24ஆம் நாள் பிரதமர் சர்ச்சிலின் அழைப்புக் கிணங்க, பில்லி கிரகாம் அவரைச் சந்தித்தார். குறிக்கப் பட்டிருந்த ஐந்து நிமிட நேரத்தையும் மீறி, நாற்பது நிமிடங்கள் இருவரும் உரையாடினர்.

இந்த உலகம் பிழைப்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்று கூறிய சர்ச்சிலுக்கு, கிறிஸ்துவால் எல்லாம் கூடும் என்று பில்லி விளக்கினார். இறுதியில் சர்ச்சில்கூட உலகம் தேவனை நோக்கித் திரும்ப வேண்டும் என்று ஒப்புக்கொண்டார்.

ஐரோப்பிய சுற்றுப் பயணம்

1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டு, ஹெல்சிங்கி, ஸ்டாக்ஹோம், கோபன்ஹேகன் ஆம்ஸ்டர்டாம், பிராங்பர்ட், பாரிஸ் நகரங்களில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினர்.

கிழக்கு பெர்லினின் கம்யூனிச அரசாங்கத்தின் எதிர்ப் புக்கிடையே, பெர்லின் மாநகரில் எண்பதினாயிரம் பேருக்கு பில்லி நற்செய்தி அறிவித்தார். உலகப் போரின் பின்விளைவு களில் கலங்கியிருந்த பதினாயிரம் பேர் மனந்திரும்பி இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றனர்!

இதற்கிடையே மூத்திரக்காய் கோளாறினால், பில்லி கிரகாம் சுகவீனமுற்றார். உடனே அமெரிக்காவுக்குத்

திரும்பினார். அங்கே அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஒரு புகைப்படக் கம்பெனி அவருடைய வாழ்க்கையைப் படமெடுக்க அனுமதித்தால் இலட்சம் டாலர்கள் முன்பணமாக அளிக்க முன்வந்தது. என்றுமே பேர் பிரஸ்தாபத்தை விரும்பாத பில்லி கிரகாம் உடனே மறுத்துவிட்டார்!

ஸ்காட்லாந்து பயணம்

1955ஆம் ஆண்டு தன்னுடைய மூதாதையர் நாடான ஸ்காட்லாந்து நாட்டில் எழுப்புதல் கூட்டங்களைப் பில்லி கிரகாம் நடத்தினார். மார்ச்சு, ஏப்ரல் இரண்டு மாதங்களும் கிளாஸ்கோ நகர் ஆவியின் மழையில் நனைந்தது. கடினமான உழைப்பாளிகள்கூட மனம்திரும்பி மற்றவர்களுக்கும் சாட்சி பகர்ந்தனர்.

முகத்தில் தழும்புகள் நிறைந்திருந்ததால் பின்வாங்கிய ஒரு தொழிலாளியை மற்றொருவன், "ஏன் சார்லி, கூச்சப்படுகிறாய்? உன்னைவிட அதிகத் தழும்புகளைப் பெற்ற இயேசுவானவரைப் பின்பற்றுபவர்கள் நாம்" என்று கூறிச் சாட்சி பகர அழைத்துச் சென்றானாம்!

மீண்டும் லண்டன்

1955ஆம் ஆண்டு மே மாதம், ஏழு நாட்கள் லண்டன் 'வெம்ப்லி' அரங்கில் பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். முந்தைய ஆண்டு மனந்திரும்பிய அநேகர் இக்கூட்டங்களில் ஆலோசகர்களாகப் பணியாற்றினர்.

ஜோண் வின்மில் என்ற பிரிட்டிஷ் நடிகை 1954இல் நடந்த நற்செய்திக் கூட்டத்தில் மனந்திரும்பியிருந்தார். எனவே, மற்றொரு பிரபலமான நடிகரான ஜாண் பிரென்ச் என்பவருடன் திருமணம் செய்துகொள்ளவிருந்ததைத் தடுத்துவிட்டார்.

இதையறிந்து கோபம் கொண்ட ஜாண் பிரென்ச், பில்லி கிரகாம் மீண்டும் லண்டன் வந்திருப்பதையறிந்து, அவரை அடிக்கும் நோக்கத்துடன் பில்லியிடம் வந்தார். அவருடைய நோக்கத்தை அறிந்த பில்லி அவரைத் தடுத்து, அன்பான குரலில் கிறிஸ்துவை பற்றி எடுத்துக் கூறினார். ஜாண் பிரென்ச் மனமாற்றமடைந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்.

விரைவிலேயே ஒரு மிஷனெரியாகத் தூரக்கிழக்கு நாடு களுக்குப் பயணமானார் ஜாண் பிரென்ச்! ஜோன்வின்மில் பில்லி கிரகாமின் குழுவினரில் ஒருவரான பில்பிரௌன் என் பவரை மணந்து முழு நேர ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார்.

பிரிட்டிஷ் மகாராணியாரின் விருப்பத்துக்கிணங்க பில்லி கிரகாம் அவருடைய குடும்ப ஆலயத்தில் அருளுரையாற்றினார். அவரளித்த விருந்திலும் கலந்துகொண்டார்.

கோடைகாலத்தில் மீண்டும் ஐரோப்பாவில் பல இடங்களில் நற்செய்திக் கூட்டங்களை நடத்தினார்.

இந்தியாவில் பில்லி கிரகாம்!

இந்திய சுவிசேஷக் குழுவின் அழைப்பின்பேரில், அனைத்து சபைகளின் ஆதரவுடன் 1956ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பில்லி கிரகாம் பம்பாய், சென்னை, கோட்டயம், புது டில்லி ஆகிய இடங்களில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார்.

மொழிக் கலவரத்தினால் பம்பாயில் வெளியே எழுப்புதல் கூட்டம் நடத்த முடியாமல் போயிற்று. போதகர்களுக்குப் பயிற்சியளிக்கும் விதத்தில் பில்லி கிரகாம் கூட்டமொன்றை நடத்தினார்.

பத்திரிகை நிருபர்களின் கேள்விகள் இரட்சிப்பைப் பற்றியும் கிறிஸ்தவ உண்மைகளைப்பற்றியுமே இருந்ததைக் கண்டு அவர்களுடைய ஆர்வத்தை எண்ணி, பில்லிகிரகாம் வியப்படைந்தார்!

தமிழ்நாட்டில் பில்லி கிரகாம்!

சென்னை நகரில் அவருடைய அருளுரைகள் ஒரே வேளையில் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன. அவருடைய பேச்சைக்கேட்டு மனந்திரும்பிய ஒரு இந்து வாலிபர் ஜேகப் பால் என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். பெற்றோர், உறவினர்களின் வற்புறுத்தலினால் இரு முறைகள் பின்வாங்கினார். ஆனால், மீண்டும் கிறிஸ்துவோடு ஒப்புரவானார். இதனால் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட அவர், இன்று இந்துக்கள் மத்தியில் நற்செய்திப் பணி புரிந்து வருகிறார்!

பாளையங்கோட்டை நகரில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பில்லி கிரகாம் நற்செய்தியை அறிவித்தார்.

பிற மாநிலங்களில் பில்லி கிரகாம்

கோட்டயம் நகரில் தென்னிந்தியத் திருச்சபை, ஜேக் கோபைட் சபை, மார்தோமா சபை மூன்று சபைகளும் இணைந்து கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன. சுமார் 75,000 பேர் நற்செய்தியைக் கேட்டனர்.

புதுடில்லி நகரில் பில்லியின் அருளுரையை இந்தி மொழியில் பெயர்த்துக் கூறியவர் அக்பர் அப்துல் ஹக் என்ற அறிஞர். அமெரிக்காவில் உயர்கல்வி பெற்றிருந்த அவர், டில்லி, ஹென்ரி மார்ட்டின் இஸ்லாமியப் பள்ளியின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.

அவர் ஒரு தலைமுறைக்கு முன்னர் இஸ்லாமிலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய திறமையைக் கண்ட பில்லி கிரகாம், அவரைத் தன்னுடைய குழுவில் ஒருவராகச் சேருமாறு வேண்டினார். அதை ஏற்றுக்கொண்ட அக்பர் ஹக் 1956இல் அமெரிக்காவில் லூயிவில்லியில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பிறகு மீண்டும் இந்தியாவுக்கு வந்து கான்பூர், இலங்கையில் கொழும்பு போன்ற நகரங்களில் கூட்டங்களை நடத்தினார். இன்று பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவில் ஒருவராக உலகெங்கும் எழுப்புதல் கூட்டங்களை நடத்தி வருகிறார். புது டில்லியில் இருக்கும்போது பில்லி கிரகாம் பிரதமர் நேருவையும் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார்.

1956 பெப்ருவரி மாதம் பில்லி கிரகாம் ம்ணிலா, ஹாங்காங், ஜப்பான், கொரியா, ஹவாய் ஆகிய இடங்களில் நற்செய்திக் கூட்டங்களை நடத்தினார்.

நியூயார்க் எழுப்புதல் கூட்டம்

அமெரிக்காவில் மாபெரும் நகரான நியூயார்க், தீய செயல்களுக்குப் பெயர் பெற்ற நகரம். ஆனால், இங்கும் பில்லி கிரகாம் தன்னுடைய எழுப்புதல் கூட்டத்தைப் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

31 சபைப் பிரிவுகளைச் சேர்ந்த 1700 சபைகள் இதில் பங்கு கொண்டன. 4300 ஆலோசகர்கள் பயிற்சியளிக்கப் பட்டனர். பில்லியின் மைத்துனரும், சிறந்த பிரசங்கியுமான லீட்டன் போர்டு சபைத் தொடர்பைத் திறம்படக் கவனித்துக் கொண்டார்.

1957ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் தேதி 'மாடிசன் ஸ்கொயர் கார்டன்' அரங்கில் துவங்கிய எழுப்புதல் கூட்டம், பதினாறு வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றது! நிறப் பிரச்சினை, இளைஞர் அமைதியின்மை, மதுப்பழக்கம் போன்ற பிரச்சினைகளுக்குக் கிறிஸ்தவ முறையில் தீர்வு காணும் வழிகளைத் தன்னுடைய அருளுரைகள் மூலம் பில்லி கிரகாம் எடுத்துக் கூறினார்.

ஒரு மாபெரும் நிறுவனம் இந்த அருளுரைகளை, நாடு முழுவதும் ஒலிபரப்புவதற்காக ஒரு லட்சம் டாலர் தொகையை

நன்கொடையாக அளித்தது. இதனால் நாடெங்கிலும் உள்ளோர் இந்த அருளுரைகளினால் பயனடைய ஏதுவாயிற்று.

செப்டம்பர் முதலாம் தேதி டைம்ஸ் சதுக்கத்தில் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் இதுவரை இல்லாதவிதமாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கூடி தேவனைத் துதித்தனர்!

தோல்வியடைய நேரிடும் என்று பலரும் எதிர்பார்த்த இந்த எழுப்புதல் கூட்டங்களுக்கு மொத்த 23,97,000 பேர் வருகை தந்தனர். 61,148 பேர் மனந்திரும்பி ஆலோசனைகளைப் பெற்றனர்!

தொலைக்காட்சிகளின்மூலம் இந்த அருளுரைகளைக் கேட்ட மேலும் 30,000 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். 15 லட்சம் பேர் கிறிஸ்துவைப்பற்றி மேலும் அறிய வேண்டும் என்ற அவாவுடன் கடிதம் எழுதினர். ஆவியானவரின் வல்லமை வாய்ந்த கிரியையின் பலன் இது!

ஆஸ்திரேலியாவில் பில்லி கிரகாம்!

1959ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 15ஆம் நாள் ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்பர்ன் நகரில் எழுப்புதல் கூட்டம் துவங்கியது. தொலைக்காட்சி, வானொலி மூலம் மாநிலத்திலுள்ள அனைவரும் பங்குபெறுமாறு வசதி செய்யப்பட்டிருந்தது.

பல்லாயிரக்கணக்கானோர் நற்செய்தியைக் கேட்டுப் புத்துணர்வு பெற்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பைப் பெற்றனர்.

மதுவிலும், சூதாட்டத்திலும் சிக்கியிருந்தவர்களைக்கூட ஆவியானவரின் கரம் தொட்டுக் குணப்படுத்தியது. ஜார்ஜ் ஜாக்சன் என்பவர் துணி ஆலையொன்றில் பணியாற்றிவந்தார். குடியிலும் நைட் கிளப் ஆட்டங்களிலும், குதிரைப் பந்தயத்திலும் மனதைப் பறிகொடுத்திருந்த அவர், தேவனைப் பற்றிய எண்ணமே இல்லாமல் காலம் கழித்தார்.

அவருக்கும் அவருடைய மனைவி டாணுக்கும் சண்டை மூண்டு இருவரும் பிரியும் தறுவாயில் இருந்தனர். எழுப்புதல் கூட்டத்திற்குச் சென்றிருந்த டாண் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்.

அவருடைய மனமாற்றத்தை அறிந்த ஜார்ஜ், தன் மனைவி தன்னால் பெற முடியாத மனச் சமாதானத்தைப் பெற்றுள்ளதை உணர்ந்தார். தானும் கூட்டத்திற்குச் செல்ல விரும்பினாலும், மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற தயக்கத்தில் நாட்களைக் கழித்தார்.

இறுதியில் கறுப்புக் கண்ணாடி அணிந்து கூட்டத்தில் கலந்துகொண்டார். மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். 1965ஆம் ஆண்டு ஜாக்சன் தம்பதியர் இருவரும் போர்னியா நாட்டுக்கு மிஷனரிகளாகக் கப்பலேறினர்!

மார்ச்சு 15ஆம் நாள் நடைபெற்ற இறுதிக் கூட்டத்திற்கு 1,43,750 பேர் வந்திருந்தனர். இவர்களில் 28,105 பேர் மனந்திரும்பி ஆலோசனைகளைப் பெற்றனர்!

இதற்கிடையே பில்லி கிரகாமின் குழுவைச் சேர்ந்த கிரேடி வில்சன், லைட்டன் போர்டு, ஜோ பிளிங்கோ மூவரும் நியூஜிலாந்து நாட்டில் ஆக்லாந்து, வெல்லிங்டன், கிரைஸ்ட் சர்ச் ஆகிய நகரங்களில் எழுப்புதல் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். இவற்றின் இறுதிக் கூட்டங்களில் பில்லி கிரகாம் கலந்து கொண்டு அருளுரையாற்றினார்.

1959 மே மாதத்தில் பில்லி கிரகாம் சிட்னி நகரில் மாபெரும் எழுப்புதல் கூட்டத்தை நடத்தினார். வானொலி மூலம் பலர் நற்செய்தியைக் கேட்க முடிந்தது. கடின இதயமுள்ள தொழிலாளிகளைக்கூட, பில்லியின் வலிமையான அரு ளுரைகள் கவர்ந்து மனமாற்றமடையச் செய்தன.

அவருடைய குழுவைச் சேர்ந்த மூவரும் பெர்த், பிரிஸ் பேன், அடிலெய்டு நகரங்களில் கூட்டங்களை நடத்தினர். இந்த எழுப்புதல் கூட்டங்களின் மூலமாக 1,30,000 பேர் மனந்

திரும்பினர். ஆலயங்கள் நிரம்பி வழிந்தன. ஒரு சபை 404 புதிய விசுவாசிகளைப் பெற்றது!

ஆப்பிரிக்கப் பயணம்

1960ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் முடிய மூன்று மாதங்கள் நைஜீரியா, எத்தியோபியா, ரொடீஷியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். அவருடன் அவருடைய குழுவின் நீக்ரோ பிரசங்கி ஹோவார்ட் ஜோன்ஸ் என்பவரும் சேர்ந்துகொண்டார்.

எத்தியோபிய அரசர் ஹெய்லி சலாசி என்ற கிறிஸ்தவ அரசர் இந்தப் பயணத்தின்போது பில்லியின் நெருங்கிய நண்பரானார். இதன் பின்னர் அடிக்கடி எத்தியோபியாவில் பில்லி கிரகாம் நற்செய்திக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

தான் சென்ற நாடுகளில் கறுப்பர் இன அரசர்களுக்கு பில்லி துணிவுடன் கிறிஸ்துவைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். அவர்களும் ஆர்வமாகக் கேட்பதைக் கண்டு தேவனைத் துதிப்பதுண்டு!

1960இல் மீண்டும் ஐரோப்பாவில் கூட்டங்களை நடத்தினார் பில்லி கிரகாம்.

மீண்டும் அமெரிக்கா

1961ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் நடைபெற்ற எழுப் புதல் கூட்டத்தில் முதன்முதலாக இறையியல் பயிலும் மாணவர்கள், பெரிய கூட்டங்களில் நற்செய்திப் பணி செய்வது எப்படி என்னும் பயிற்சியளிக்கப்பட்டது.

பில்லியின் குழுவைச் சேர்ந்த லேன் ஆடம்ஸ் சாட்சி பகருவது, அருளுரையாற்றுவது, மனந்திரும்பியவர்களுக்கு ஆலோசனை பகர்வது இவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி யளித்தார். இதன் பின்னர் ஒவ்வொரு எழுப்புதல் கூட்டங்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

பின்னர் இப்பயிற்சி போதகர்களுக்கும், ஆர்வமுள்ள சபை மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இன்று 'நற்செய்தியாளர் பயிற்சிப் பள்ளி (The School of Evangelism) ஒவ்வொரு எழுப்புதல் கூட்டத்திலும் உள்ளூர் நற்செய்தியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் விதத்தில் பணியாற்றி வருகிறது.

1963 ஆகஸ்டு மாதத்தில் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் மீண்டும் ஒருமுறை பெரிய எழுப்புதல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 3500 சபைகள் பங்குகொண்டன. 7000 ஆலோசகர்கள் பணியாற்றினர். பாடகர் குழுவில் மட்டும் 5000பேர்!

முதன்முறையாக வானொலி மூலம் ஆயத்த ஜெபக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இறுதிக் கூட்டத்தில் 1,34,254 பேர் கலந்துகொண்டு தேவனைத் துதித்தார்கள்!

உலகப் பொருட்காட்சி

1964ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவங்கிய நியூயார்க் உலகம் பொருட்காட்சியில் 'பில்லி கிரகாம் அரங்கு' அமைக்கப் பட்டிருந்தது. இரட்சிப்பின் செய்தியை விளக்கும் 'ஐந்தாம் பரிமாணத்தில் மனிதன்' (Man in fifth Dimension) என்ற திரைப்படம் காட்டப்பட்டது. கிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிய விரும்புவர்களுக்கு வழிகாட்டும் நூல்கள் அளிக்கப்பட்டன.

மனம்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோர் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான ஆலோசனைகளைப் பெற்றனர். மொத்தம் 26 மாதங்கள் இந்தப் பொருட்காட்சி நடைபெற்றது.

125 நாடுகளைச் சேர்ந்த 50 லட்சம் பேர் பில்லி கிரகாம் அரங்குக்கு வருகை தந்தார்கள். பத்து லட்சம் பேர் திரைப்படத்தைக் கண்டு களித்து இரட்சிப்பின் செய்தியைத் தெரிந்துகொண்டார்கள்.

1907இல் ஜெர்மனியிலுள்ள டார்ட்மென்ட் நகரில் நடைபெற்ற யூரோ '70 (EURO' 70) எழுப்புதல் கூட்டத்தை முதன் முறையாக ஐரோப்பாவெங்கிலும், 38 நகரங்களிலுள்ள மக்கள் தொலைக்காட்சிமூலம் கண்டார்கள்!

6

உலகளாவிய நற்செய்திப் பணி தொடர்கிறது!

பல்லாண்டுகளுக்கு முன்னர் சார்லெட் நகர வணிகர்கள் ஒன்றுகூடி வேண்டிக் கொண்டதின்படி, அவ்வூரிலிருந்து எழும்பிய பில்லி கிரகாம் உலகெங்கும் எழுப்புதல் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

ஆண்டுக்கு ஒன்பது மாதங்களை எழுப்புதல் கூட்டங்களை நடத்துவதிலேயே கழிக்கிறார் பில்லி கிரகாம்! ஆயிரக்கணக்கானோர் அவருக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறார்கள்.

1970ஐ அடுத்த ஆண்டுகளில் ஓர் உலகக் கிறிஸ்தவ தலைவராக அங்கீகாரம் பெற்றார் பில்லி கிரகாம்! ஆண்டவர் அவருக்குப் பல அற்புதமான வாய்ப்புக்களின் வழிகளைத் திறந்துகொடுத்தார்!

ஒப்புரவாகுதலின் செய்தி

1973ஆம் ஆண்டு. தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களின் ஆளுகையின்கீழ் கறுப்பினத்தவர் பல்வேறு கொடுமைகளை அனுபவித்துவந்த காலகட்டம் அது! வெள்ளையர்கள் கூடிவரும் இடங்களுக்குக் கறுப்பர்கள் வரக் கூடாது என்ற சட்டமே இருந்தது!



ஜோகன்னஸ்பர்கில் அனைவரும் இணைந்த
எழுப்புதல் கூட்டம்

பில்லி கிரகாம் அங்கே வந்து எழுப்புதல் கூட்டங்களை நடத்தும்படி அவருக்கு அழைப்பு வந்தது.

இனப் பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒன்றாகக் கூடிவந்தால் மட்டுமே கூட்டங்களை நடத்த முடியும் என்று கூறிவிட்டார் பில்லி கிரகாம்! அதற்காக அவர் தொடர்ந்து ஜெபித்து வந்தார்!

இறுதியாக அரசு அனுமதி கிடைத்தது. டர்பன் மற்றும் ஜோகன்னெஸ்பர்க் நகரங்களில் நடைபெற்ற கூட்டங்களில் வெள்ளையர்களோடுகூட கறுப்பர்களும் கலந்துகொண்டனர்!

ஒப்புரவாகுதலின் செய்தியை பில்லி கிரகாம் வல்லமையாக அறிவித்தார்!

அவர் இறுதி அழைப்பை விடுத்தபோது, வெள்ளையர்களோடு சேர்ந்து கருப்பர்களும் ஜெபிப்பதற்காக முன்னால் வந்தது அதுவரை காண முடியாத ஒரு காட்சியாக இருந்தது!

19 ஆண்டுகளுக்குப் பின்னர் அப்பார்தீட் முறை ஒழிக்கப்பட்டு, அனைவரும் சம உரிமை பெற்றதற்கு இந்தக் கூட்டம் வழியைத் திறந்து கொடுத்தது எனலாம். இனப் பாகுபாடு இன்றி அனைவரும் ஒன்றுகூடி ஜெபித்தது ஒரு புதிய ஒப்புரவாகுதலின் சிந்தனையை உருவாக்கிக் கொடுத்தது!

மாபெரும் நற்செய்திக் கூட்டம்!

1974ஆம் ஆண்டு தென் கொரியாவின் தலைநகரான சியோலில் நடத்தப்பட்ட எழுப்புதல் கூட்டம் இதுவரை நடத்தப்பட்ட நற்செய்திக் கூட்டங்கள் அனைத்தையும்விட மிகப் பெரிய கூட்டம் என்று கணிக்கப்பட்டுள்ளது!

ஒரே கூட்டத்தில் 27 இலட்சம் பேர் கலந்துகொண்டனர்! இந்தக் கூட்டம் தென்கொரியா நாடெங்கும் எழுப்புதலை உருவாக்கியது! அன்று பரவத் துவங்கிய எழுப்புதல் அக்கினி இன்றும் பல பெரிய சபைகளை எழச் செய்து வருகிறது!



உலகின் மாபெரும் எழுப்புதல் கூட்டம்
(27 இலட்சம் பேர் கூடிவந்தனர், சியோல், 1974)

உலகக் கிறிஸ்தவ மாநாடுகள்

பில்லி கிரகாமின் முயற்சியின்பேரில் பல உலக மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

1966ஆம் ஆண்டு பெர்லினில் கூடிய "உலக நற்செய்திப் பணி இயக்கத்தின்" முதல் மாநாட்டில் தொடக்க உரையாற்றிய பில்லி கிரகாம், இந்த இயக்கத்தின் மாநாடுகளில் தொடர்ந்து கலந்து கொண்டு பயனுள்ள கருத்துக்களைக் கூறி வழிகாட்டி வருகிறார்.

1974ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சுவிட்சர்லாந்து நாட்டு லாசான்னி நகரத்தில் நடைபெற்ற நற்செய்திப் பணி உலக மாநாட்டில் பில்லி கிரகாம் பெரும்பங்கேற்றார்.

உலகெங்கும் நற்செய்தி அறிவிப்பதில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் எவை, அவற்றைத் தீர்ப்பது எப்படி என்ற காரியங்களை உலகின் பல நாடுகளிலிருந்து வந்த கிறிஸ்தவ தலைவர்கள் ஆய்வுசெய்த மாநாடு இது. வேதாகம அடிப்படையிலான நற்செய்திப் பணி வலியுறுத்தப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு கொண்ட இந்த மாநாடு லாசான்னி உடன் படிக்கை என்ற வழிகாட்டும் அறிக்கையைத் தயாரித்தது!

உலகெங்கிலும் இடம்விட்டு இடம் சுற்றித் திரிந்து ஊழியம் செய்யும் நற்செய்தியாளர்களுக்கான மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று பில்லி கிரகாம் வாஞ்சை கொண்டிருந்தார்.

1983ஆம் ஆண்டு அவருடைய கனவு நிறைவேறிற்று. ஐரோப்பாவில் ஹாலந்து நாட்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் நற்செய்தியாளர்களுக்கான முதல் உலக மாநாடு நடைபெற்றது.

உலகின் பல நாடுகளிலிருந்து வந்த நற்செய்தியாளர்கள் ஊழியத்தில் பலப்படுத்தப்பட்டார்கள். பல புதிய வழிமுறைகள் கண்டறியப்பட்டன!

1986ஆம் ஆண்டு நற்செய்தியாளர்களின் இரண்டாவது உலக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாடுகளில் கலந்து கொண்டவர்கள் தங்கள் சொந்த நாட்டில் நடைபெறும் ஊழியங்களில் ஊக்குவிக்கப்படும்படி பில்லி கிரகாம் தென்னாப் பிரிக்கா, கொரியா, பிரேசில், தாய்வான், பிலிப்பைன்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். பல புதிய நற்செய்தியாளர்கள் இந்தக் கூட்டங்களின்மூலம் ஊழியத்தில் நேரடிப் பயிற்சி பெற்றனர். தொடர்ந்து இவர்கள் அந்தந்த நாடுகளில் ஊழியத்தை நடத்தி வருவதால் எழுப்புதல் அக்கினி அவிந்துபோகாமல் காக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் எழுப்புதல் கூட்டங்கள்

1977ஆம் ஆண்டு நவம்பர் 29 முதல் டிசம்பர் 11 முடிய இந்தியாவின் நான்கு முக்கிய நகரங்களில் பில்லி கிரகாம் நற் செய்திக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவின் இணை நற்செய்தியாளர் அக்பர் அப்துல் ஹக் பில்லி கிரகாமுக்குத் துணையாக ஊழியத்தில் ஈடுபட்டார்.

கல்கத்தா, ஹைதராபாத், கோட்டயம், சென்னை நகரங்களில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சென்னையில் பழைய நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டங்களில் இலட்சக்கணக்கானவர்கள் பில்லி கிரகாமின் வல்லமையான பிரசங்கங்களுக்குச் செவிகொடுத்தனர்.

இந்தக் கூட்டங்களில் மொத்தம் 6,76,000 பேர் நற்செய்தி யைக் கேட்டனர். 13,291 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் வந்தனர்! பல சபைகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்தது!

இந்தக் கூட்டங்கள் நடைபெற்ற வேளையில் ஆந்திராவில் ஆயிரக்கணக்கானவர்கள் சூறாவளியின் பின்விளைவுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து பில்லி கிரகாம் பெரிதும் மனம் வருந்தினார். பாதிக்கப்பட்டவர்களுக்காக

ஜெபித்த அவர் உடனடியாக *ஆபத்துதவி நிதி*யிலிருந்து 23800 டாலர் உதவிப் பணம் அளிக்கப்படுவதாக அறிவித்தார்!

பொதுவுடமை நாடுகளில் வல்லமையான ஊழியம்

பொதுவுடமை நாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலும் பில்லி கிரகாம் தனது ஊழிய முயற்சிகளிலிருந்து பின்வாங்கவில்லை!

1977ஆம் ஆண்டு அவர் ஹங்கேரி நாட்டிலும் அடுத்த ஆண்டு போலந்து நாட்டிலும் ஊழியம் செய்தார்.

நெருக்கங்களுக்கு மத்தியில் மனம் தளர்ந்து போயிருந்த விசுவாசிகளை அவர் உற்சாகப்படுத்தினார்.

பின்னாட்களில் இந்த நாடுகளில் பொதுவுடமை ஆதிக்கம் வீழ்ச்சியடைந்து, மறுபடியும் சுயாதீனமான ஆராதனை துவங்கும் வரையில் அங்குள்ள விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும்படி பில்லி கிரகாம் அற்புத மான ஊழியத்தைச் செய்துவந்தார்.

மாஸ்கோவில் பில்லி கிரகாம்

1959ஆம் ஆண்டு பில்லி கிரகாம் ஒரு சுற்றுலாப் பயணி யாக ரஷ்யாவின் தலைநகராகிய மாஸ்கோவுக்குச் சென்றிருந் தார். அப்போது பொதுவுடமை ஆளுகையின் காரணமாக நற்செய்திப் பணி தடைசெய்யப்பட்டிருந்தது.

மாஸ்கோ விளையாட்டு அரங்கத்துக்குச் சென்ற பில்லி கிரகாம் தனக்கு அந்த அரங்கில் நற்செய்தி அறிவிக்கும் வாய்ப்பைக் கொடுக்கும்படி தேவனிடம் ஊக்கமாக வேண்டி னார். தொடர்ந்து விசுவாசத்துக்காகப் பாடுபட்டுவந்த அந்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்காக அவர் ஜெபித்து வந்தார்.

1982ஆம் ஆண்டிலும் பின்னர் 1984ஆம் ஆண்டில் ரஷ்யாவின் 6 பட்டணங்களிலுள்ள சபைகளில் பிரசங்கம் செய்யும் வாய்ப்பை தேவன் அவருக்குக் கொடுத்தார்.

என்றாலும் பொதுவான எழுப்புதல் கூட்டங்கள் நடத்த முடியாமல் இருந்தது!

பொதுவுடமை ஆட்சி வீழ்ச்சியடைந்தது. ரஷ்ய நாடெங்கும் மூடிக் கிடந்த ஆலயங்கள் திறக்கப்பட்டன!

1992ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 33 ஆண்டுகள் கழித்து பில்லி கிரகாமின் ஜெபம் கேட்கப்பட்டது!

மாஸ்கோ ஒலிம்பிக் விளையாட்டு அரங்கில் பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். முன்னர் செஞ் சட்டைப் படையின் பாடல் குழுவிலிருந்தவர்கள் இப்போது துதிப் பாடல்களைப் பாடினர்!

மொத்தம் 1,55,500 பேர் நற்செய்தியைக் கேட்டனர். இவர்களில் 60,000 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் வந்தனர்!

எத்தனையோ இரத்தச்சாட்சிகளின் இரத்தம் சிந்தப் பட்டிருந்த அந்த நாட்டில் ஆத்துமாக்களின் அறுவடை அபரிமிதமாக இருந்து வருகிறது!

சீனாவில் பில்லி கிரகாம்!

பில்லிகிரகாமின் மனைவி ரூத் பெல் சீனாவில் சிங்கி யாங் என்ற இடத்தில் பிறந்தவர். அப்போது ரூத்தின் பெற்றோர் நெல்சன் மற்றும் வெர்ஜினியா பெல் சீனாவில் மருத்துவ அருட் பணியாளர்களாக ஊழியம் செய்து வந்தனர்.

பின்னர் பொதுவுடமைவாதிகளின் எழுச்சியின் காரண மாக அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது!

தனது கணவருடன் சீனாவுக்கு ஊழியம் செய்யச் செல்ல வேண்டும் என்பது ரூத் கிரகாமின் நீண்ட நாளைய வாஞ்சை யாகவும், தொடர்ந்த ஜெபமாகவும் இருந்தது.

ரூத் கிரகாம் தனது 68ஆவது வயதில் அந்தச் சிலாக்கியத்தைப் பெற்றார்!

1988ஆம் ஆண்டு ஏப்ரல் 13 முதல் 28 முடிய பில்லி கிரகாம் சீனாவில் ஊழியம் செய்தபோது ரூத்தும் தன் கணவருடன் சென்றிருந்தார். ஹூவாயினில் தான் சிறுவயதில் படித்த பள்ளியின் இப்போதைய மாணவர்களோடு சேர்ந்து ஜெபிக்கும் வாய்ப்பைப் பெற்றார்!

சீனாவின் மிகப் பெரிய புரோட்டஸ்தாந்து இறையியல் கல்லூரியான நான்சிங் இறையியல் பள்ளி, பெய்ஜிங் கிறிஸ்தவ ஆலயம் மற்றும் ஹாங்காய் மாநகரிலுள்ள ம்யூ–என் சபையிலும் பில்லி கிரகாம் பிரசங்கம் செய்தார்.

சீனநாட்டு அதிபரான லீ பெங்குடன் 50 நிமிடங்கள் உரையாடும் வாய்ப்பும் பில்லி கிரகாமுக்குக் கிடைத்தது!

என்றாலும் பொது இடங்களில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தும் அனுமதி சீனாவில் எவருக்கும் கொடுக்கப்படுவதில்லை!

அத்தகைய வாய்ப்பை தேவன் விரைவில் கொடுக்க வேண்டும் என்று பில்லி கிரகாம் ஊக்கமாக ஜெபித்து வருகிறார்!

தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்க முடியாத சீனக் கிறிஸ்தவர்களுக்காக எங்குமுள்ள விசுவாசிகள் பரிந்துரை ஜெபங்களை ஏறெடுத்து வர வேண்மென்று பில்லி கிரகாம் கேட்டுக்கொள்கிறார்.

பலரும் நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்பு!

தனது எழுப்புதல் கூட்டங்களின்மூலம் கோடிக் கணக்கானவர்களுக்கு நற்செய்தி அறிவித்துவரும் பில்லி கிரகாம் நவீன தொடர்பு சாதனங்களின்மூலம் மேலும் பலரும் ஒரே வேளையில் நற்செய்தியைக் கேட்கும்படி செய்து வருகிறார்.

1984ஆம் ஆண்டு ''அருட்பணி இங்கிலாந்து'' கூட்டங்களில் தொலைக்காட்சி இணைப்பின்மூலம் ஒரே வேளையில் ஆறு பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் பில்லி

கிரகாமின் பிரசங்கங்களைக் கேட்க முடிந்தது. அந்தந்தப் பகுதிகளின் சபைகளின் ஒருங்கிணைப்பின்மூலம் மனம் திரும்புகிறவர்களுக்கான ஆலோசனைப் பணி ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன!

1986ஆம் ஆண்டு செப்டம்பர் 20 முதல் 27 வரை பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டங்களில் தொலைக்காட்சி இணைப்புகளின்மூலம் ஐரோப்பாவின் பல நாடுகளைச் சேர்ந்த விசுவாசிகளும் பங்குபெற முடிந்தது!

1989ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் நடைபெற்ற "அருட்பணி உலகம்" எழுப்புதல் கூட்டங்களில் பில்லி கிரகாம் செய்த பிரசங்கங்கள் செயற்கைக் கோள் இணைப்புகளின் மூலம் ஒரே வேளையில் உலகின் பல பகுதிகளில் ஒளிபரப்பப் பட்டன!

1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹாங்காங் நகரில் தொடர்ந்து ஐந்து இரவுகள் பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். செயற்கைக் கோள் இணைப்பின் மூலம் ஒரே வேளையில் 30 நாடுகளைச் சேர்ந்த 1 கோடிப் பேர் பில்லி கிரகாமின் பிரசங்கங்களைக் கேட்டனர்!

இவ்வாறு இன்றும் ஆண்டின் பல மாதங்களை எழுப்புதல் கூட்டங்களை நடத்துவதில் செலவிடுகிறார் பில்லி கிரகாம்!

எண்பது வயதை எட்டிப் பிடித்திருக்கும் பில்லி கிரகாமிடம் ஓய்வு பெறுவதைப் பற்றிக் குறிப்பிடும்போது, "அப்போஸ்தலர்கள் ஊழியத்தில் ஓய்வுபெற்று அமர்ந்திருந்த தாகப் புதிய ஏற்பாட்டில் எங்கும் குறிப்பிடப்படவில்லையே!" என்று கூறிவிடுகிறார்!

7

பல்வேறு வல்லமையான ஊழியங்கள்!

பத்திரிகையின் செய்தி ஒரு முறை பில்லிக் கிரகாமைக் கலங்க வைத்ததுண்டு. 1950ஆம் ஆண்டு அட்லாண்டா நகரில் மாபெரும் எழுப்புதல் கூட்டமொன்றை பில்லி கிரகாம் நடத்தினார். ஏறத்தாழ ஐந்து லட்சம் பேர் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியைச் செய்தியாக வெளியிட்ட *'அட்லாண்டா கான்ஸ்டிடியூஷன்'* என்ற இதழ் இரண்டு புகைப் படங்களையும் பிரசுரித்திருந்தது. பில்லி கிரகாம் அருளுரை யாற்றுவதைப் போன்று அமைந்த படம் ஒன்று. அடுத்த படத்தில் அவருடைய குழுவினர் 16,000 டாலர் நிரம்பிய காணிக்கைப் பையுடன் மலர்ந்த முகத்தினராகக் காணப்பட்டனர்!

"என்னுடைய வயிற்றில் யாரோ குத்தியதுபோல் உணர்ந் தேன்" என்று பில்லி கிரகாம் குறிப்பிட்டுள்ளார். எழுப்புதல் கூட்டங்களுக்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிவது உண்மை தான். ஆனால் இத்தகைய பிரச்சாரங்கள் தவறான எண்ணங்களைத் தோற்றுவித்துவிடுமே என்று பில்லி கிரகாம் மனம் கலங்கினார்.

பில்லி கிரகாம் நற்செய்திக் குழு (Billy Graham Evangelistic Association)

பில்லி கிரகாமின் நிலையை உணர்ந்தார், தேசிய கிறிஸ்தவ அமைப்பின் நற்செய்திப் பணி இயக்குநரான டாக்டர்

ஜெசி பேடர். அவருடைய யோசனைப்படி 1950ஆம் ஆண்டு, பில்லி கிரகாம் நற்செய்திக் குழு, அரசாங்கப் பதிவுபெற்ற லாப நோக்கற்ற நிறுவனமாக இயங்கத் தொடங்கியது. பில்லியும் அவரது உதவியாளர்களும் ஊதியம் பெறும் நற்செய்திப் பணியாளராக விளங்கினர்.

மக்கள் அளிக்கும் நன்கொடைகள் குழுவையே சேர்ந்தன. எழுப்புதல் கூட்டங்கள் அந்த இடத்தில் கிடைக்கும் காணிக்கைகளைக் கொண்டு நடத்தப்பட்டன. அவற்றில் மீதமாகும் தொகை குழுவின் நிதியிலேயே சேர்க்கப்பட்டது.

தற்போது ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு கோடி டாலர்கள் வரவு செலவுக் கணக்கில் பதிவாகின்றன. பத்து லட்சம் பேர் கொடுக்கும் நன்கொடைகளினாலேயே குழுவின் நிதி உருவா கிறது. இந்தக் குழுவின் நிர்வாக அலுவலகங்கள் மின்னியா போலீஸ் நகரில் உள்ளன. இதைத் தவிர உலகெங்கும் பத்து கிளை அலுவலகங்கள் உள்ளன.

பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவில் சுமார் இருநூறு நற்செய்தியாளர்கள் பணியாற்றுகின்றனர். குழுவின் வருமானம் முழுவதும் இவர்களுடைய நற்செய்திப் பணிக்கும் பிற பணி களுக்குமே செலவிடப்படுகிறது. இவ்வளவு பெரிய குழுவுக்கு மின்னியாபோலிஸ் அலுவலகத்தைத் தவிர வேறு சொத்து எதுவும் கிடையாது!

பில்லி கிரகாம் ஆண்டொன்றுக்கு 1,01,250 டாலர்கள் ஊதியமாகப் பெறுகிறார். இது பெரிய இறையியல் கல்லூரி முதல்வர்கள் பெறும் ஊதியத்தைவிடக் குறைவுதான்!

26 அங்கத்தினர்கள் கொண்ட இயக்குநர் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் திருமதி மேரி கிரௌலி என்பவர் ஒரே பெண்மணி. எட்வர்ட்ஹில், ஜாண் வில்லியம்ஸ் என்ற இரு நீக்ரோ அங்கத்தினர்களும் உள்ளனர்.

ஆண்டுக்கு நான்கு முறை இந்த இயக்குநர் குழு கூடி, செயல்முறைகளைப் பற்றித் தீர்மானிக்கின்றது. தீர்மானங்

களைச் செயல்படுத்த செயற்குழு ஒன்று மாதம் ஒரு முறை கூடுகிறது.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை குழுவின் இயக்குநர் கள், நற்செய்தியாளர்கள், நெருங்கிய நண்பர்கள் ஏதேனும் விடுமுறை தலத்தில் கூடி ஆலோசனைகளையும் கருத்துக்களை யும் பரிமாறிக்கொள்வர்.

செயற்குழுவின் தலைவராக ஜார்ஜ் வில்சன் நிர்வாக அலுவல்களைக் கவனித்துக் கொள்கிறார். மின்னியாபோலிஸ் நிர்வாக அலுவலகம், அலுவல்களை உடனுக்குடன் செய்து முடிக்கும் வகையில் நவீன சாதனங்களுடன் அமைந்துள்ளது.

ஒவ்வொரு நாளும் அலுவலகச் சிப்பந்திகள் பத்து நிமிட ஜெபத்துக்குப் பின்னர் அலுவல்களைத் துவங்குகின்றனர். வாரம்தோறும் கூட்டு ஆராதனையும் உண்டு. ஜெப வேண்டுதல் கள் உடனுக்குடன் அனைவருக்கும் தெரியப்படுத்தப்படு கின்றன.

அலுவலக வரவு செலவுகளை பில்லி கிரகாம் அவ்வப் போது கவனிப்பதுண்டு. வீணான செலவுகள் அவருக்குப் பிடிக்காது. வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் திறமை சாலி என்ற பெயரை பில்லி பெற்றுள்ளார்!

நற்செய்திப் பணியாளர்களுக்கான அலுவலகம் அட்லாண்டா நகரில் அமைந்துள்ளது. நூற்றுக்கணக்கான எழுப்புதல் கூட்டங்களுக்கு ஆயத்தம் செய்வதையும், நடத்து வதையும் இந்த அலுவலகம் கவனித்து வருகிறது.

லட்சக்கணக்கான மக்களின் காணிக்கைகளை நம்பியே இந்தக் குழு செயல்படுகிறது. ஆனால் என்றுமே குறைவுபடா மல் தேவன் ஆசீர்வதித்து வருகிறார். அவ்வப்போது விசேஷ காரியங்களுக்கான நிதித் தேவைகள் வானொலி மூலம் அறிவிக்கப்படுவதுண்டு.

ஆபத்துதவி நிதி (Emergency Relief Fund)

வளரும் நாடுகளின் தேவைகளுக்கு உதவி செய்யும் லட்சியத்துடன் இந்த நிதி ஆரம்பிக்கப்பட்டது. ஹோவார்ட் ஜோண்ஸ் இதை நிர்வகித்து வருகிறார். செயின்ட் லூயி நகரில் இந்த நிதியைப் பற்றி பில்லி கிரகாம் முதன்முதலாக அறிவித்த வுடனேயே 71,000 டாலர்கள் சேர்ந்துவிட்டன!

எழுப்புதல் கூட்ட நன்கொடைகளில் ஒரு பகுதி இந்த நிதியில் சேர்க்கப்படுகிறது. 'இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அளிக்கப்படுகிறது' என்ற குறிப்புடன் பின்தங்கிய நாடுகளுக்கு பண உதவியும், பொருள் உதவியும் அளிக்கப்படுகின்றன.

புனித யாத்திரைகள்

இஸ்ரேல் நாட்டில் இயேசுநாதர் வாழ்ந்த இடத்தையும் பிற வேதாகமச் சிறப்பு வாய்ந்த இடங்களையும் கண்டுகளிக்க ஆண்டுதோறும் பல உல்லாசப் பயணங்கள் ஒழுங்கு செய்யப் படுகின்றன.

கிறிஸ்தவ எழுத்தாளர் பயிற்சிப்பள்ளி

1963இலிருந்து ஆண்டுதோறும் மூன்று நாட்கள் இளம் கிறிஸ்தவ எழுத்தாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பிரபல கிறிஸ்தவ எழுத்தாளர்கள் அவர்களுக்கு உதவுகின்றனர்.

கிரேசன் கம்பெனி

பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவின் மூலம் விநி யோகிக்கப்படும் நூல்கள், இசைத் தட்டுகள், அருளுரைப் பிரதிகள் இவற்றைத் தயாரிப்பதற்காக 1950இல் இந்த நிறுவனம் துவங்கப்பட்டது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் குழுவின் நிதியில் சேர்க்கப்படுகிறது.

பில்லி கிரகாமின் நூல்கள்

பில்லி கிரகாமின் நற்செய்திப் பணியில் ஆர்வம் கொண்ட பென்னெட், டியனொர்ட் இருவரின் முயற்சியால் பத்திரிகைகளின் மூலம் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க பில்லி கிரகாம் இசைந்தார். லட்சக்கணக்கான மக்களுக்கு இறையியல், குடும்பம், அலுவல் பிரச்சினைகளில் வழிகாட்டி ஆறுதலளித்து வரும் 'என் பதில்கள்' என்ற பில்லி கிரகாமின் தினசரி கேள்வி பதில் பகுதி 1952ஆம் ஆண்டு துவங்கிற்று.

ஆரம்பத்தில் 73 பத்திரிகைகளில் தினமும் வெளிவந்த இப்பகுதி, இன்று தினமும் முந்நூற்றுக்கு மேற்பட்ட இதழ்களில் பிரசுரமாகிறது. இவற்றுள் முக்கியமான பகுதிகளைச் சேர்த்து 'என் பதில்' என்ற தலைப்பில் 1960இல் வெளியான நூல் லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனையாகியுள்ளது!

பில்லி கிரகாமின் முதல்நூலான 'தேவனோடு சமாதானம் (Peace with God) 1953ஆம் ஆண்டு வெளியாகியது. இந்த நூலை எழுத ரூத் பெரிதும் உதவினார். இந்த நூலின் பெரும்பாலான பகுதிகள் ஜெபத்துடன் முழங்காற்படியிட்ட நிலையிலேயே எழுதப்பட்டன.

"அணுகுண்டுகள் நிறைந்த இந்த உலகிற்கு, இயேசு வழிகாட்டிய வாழ்க்கை வழியை, அனைவரும் புரிந்துகொள்ளும் படி எடுத்துக் கூறுவதே என்னுடைய லட்சியம்" என்று பில்லி கிரகாம் இந்நூலைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 17 மொழிகளில், 17,50,000 பிரதிகள் விற்பனையாகியுள்ளது இந்நூல்!

மலைப் பிரசங்கத்திலுள்ள பாக்கிய வசனங்களின் அடிப் படையில் மெய்யான சந்தோஷத்தை அடைவது எப்படி என்பது பற்றி எழுதப்பட்ட 'மகிழ்ச்சியின் இரகசியம்' (The Secret of Happiness) என்ற நூல் 1956ஆம் ஆண்டு வெளியாகியது.

குழப்பத்திலும், பிரச்சினைகளிலும் துயரப்படும் உலகத்தை நம்பிக்கையின் பாதைக்கு வழிகாட்டும் நோக்கத்

துடன் 1965இல் 'எரியும் உலகு' (World Aflame) என்ற நூலை பில்லி கிரகாம் எழுதினார்.

முற்றிலும் இளைஞருக்காக அவர்களுடைய பாலுணர்வு, தலைமுறைப் பிளவு போன்ற பிரச்சினைகளில் நல்ல ஆலோசனைகளை அளிக்கும் நூல் 'இயேசுவின் தலைமுறை' (Jesus Generation) 1971இல் வெளிவந்தது.

சாத்தானின் தூதுவர்களுக்கு எதிராகப் போராடும் மனிதர்களுக்கு உதவும் தேவதூதர்களைப்பற்றிய நூலொன்றை 1975ல் 'தேவதூதர்கள்: தேவனின் ஒற்றர்கள்' (Angels: God's Secret Agents) என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டார்.

இரட்சிப்பைப்பற்றி முழுவதுமாக நூல் வடிவில் விளக்கித் தரவேண்டும் என்ற லட்சக்கணக்கான மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் தேதி வெளி வந்த 'மறுபடியும் பிறப்பது எப்படி?' (How to be born again?) என்ற நூல் பலருக்கும் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

பில்லி கிரகாமின் எழுப்புதல் கூட்டங்களில் பங்குபெற முடியாத லட்சக்கணக்கானோர் இந்த நூல்களை ஆர்வத்துடன் படித்து வருகின்றனர். இந்த நூல்களைப் படிப்பவர்களும் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி ஆவியானவர் கிரியை செய்து வருகிறார்.

வானொலிப் பணி

நற்செய்திக் கூட்டங்களை நடத்துவதில் பில்லி கிரகாம் தீவிரமாக ஈடுபட்டதால், 1944இல் நடத்தி வந்த 'இரவினிலே வரும் கீதம்' நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்திவரமுடியவில்லை. ஆனால் பலரும் பில்லி கிரகாம் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் பல லட்சக்கணக்கான மக்களுக்கு நற்செய்தியளிக்க வேண்டும் என்று வேண்டினர். இந்த வேண்டுதல் ஆச்சரியமான முறையில் பதிலளிக்கப்படும் என்று ஒருவருமே எதிர்பார்க்கவில்லை!

1950ஆம் ஆண்டு 'லூத்தரன் நேரம்' என்ற வானொலி நிகழ்ச்சியைத் தொடங்கி, நடத்திவந்த வால்டர் மேயர் மரண மடைந்தார்.

வானொலி நற்செய்திப் பணிக்கு ஏற்பட்ட இந்த இழப்புக்கு ஈடுசெய்யும்படி, 'தேசிய நற்செய்தி ஒலிபரப்பாளர் சங்கத்தின்' தலைவரான டாக்டர் தியோடர், பில்லி கிரகாமைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் முழுநேர எழுப்புதல் கூட்டங்களை நடத்திவந்த பில்லி கிரகாமால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வால்டர் பென்னட் விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்த பென்னட், டியனொர்ட் இருவரும் பில்லி கிரகாமின் நற்செய்திப் பணியில் ஆர்வம் கொண்டவர்கள்.

ஞாயிறுதோறும் நிகழ்ச்சி நடத்த, 13 வாரங்களுக்கு, 92,000 டாலர்கள் என்று ABC என்ற வானொலி நிலையத்துடன் ஒப்பந்தம் பேசினர். ஆனால் பில்லியோ மறுத்துவிட்டார்.

போர்ட்லெண்ட் நகரில் எழுப்புதல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அது. மீண்டும் பில்லியுடன் தொடர்பு கொண்டு, வாரத்துக்கு 7000 டாலர்கள் என்ற வாடகை வீதம், 25,000 டாலர்கள் முன்பணம் கட்டினால் போதும் என்று கூறினார்கள். பில்லி பதிலொன்றும் அளிக்கவில்லை.

இதற்கிடையே டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த இருவர், பில்லி கிரகாம் வானொலி நிகழ்ச்சிகள் நடத்துவதாயிருந்தால், ஆளுக்கு 1000 டாலர்கள் வீதம் நன்கொடை அனுபுவதாக வாக்களித்தனர்.

ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் இருந்த பில்லி கிரகாம், பென்னெட். டியனொர்ட் இருவருடன் முழங்காற்படியிட்டு ஜெபித்தார். ஜெபித்து முடித்தவுடன் பில்லி கிரகாம் அறிவித்த முடிவைக்கேட்டு இருவரும் திகைத்து நின்றனர்.

அன்று இரவு எழுப்புதல் கூட்டம் முடிவடையும்போது 25,000 டாலர்கள் கிடைப்பதாயிருந்தால் வானொலி நிகழ்ச்சியை எடுத்து நடத்துவதாக பில்லி கூறினார்.

காணிக்கை நேரத்திலும் பில்லி கிரகாம் ஒன்றுமே கூறாததைக்கண்டு மீண்டும் திகைப்பில் மூழ்கினர் இரு நண்பர்களும்! காணிக்கை எடுத்து முடித்த பின்னரே, தனது தீர்மானத்தைப் பற்றி பில்லி கூட்டத்தினருக்கு அறிவித்தார். கூட்டம் முடிந்த பின்னர் பணமாக அளிக்க முடியாவிட்டாலும் வாக்களிக்கும் சீட்டுக்களை அளிக்கலாம் என்று கூறினார்.

கூட்டம் முடிவடைந்தது. கையில் ஒரு காலிப் பெட்டியுடன் கிரேடி வில்சன் அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தார். காணிக்கைகளும் வாக்குச் சீட்டுக்களும் வந்து குவிந்தன. ஒரு மரத்தொழிற்சாலை அதிபர் 2500 டாலர்கள் வாக்களித்திருந் தார்.

அனைவரும் கலைந்தவுடன் பணத்தையும், வாக்குத் தொகையையும் கணக்கிட்டவர்களுக்கு ஏமாற்றமே காத்தி ருந்தது! டெக்சாஸ் நண்பர்கள் வாக்களித்திருந்த தொகையைச் சேர்த்த பின்னும் 23,500 டாலர்தான் ஆகியிருந்தது

சோர்வுடன் ஹோட்டலுக்குத் திரும்பியவர்களிடம் ஹோட்டல் சிப்பந்தி மூன்று உறைகளைக் கொடுத்தார். கூட்ட நெரிசலைக் கண்டு தயங்கிய மூவர் ஹோட்டலில் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்! திறந்து பார்த்தார்கள்.

ஆயிரம் டாலருக்கான வாக்குச் சீட்டு ஒன்றும் 250 டாலருக்கான வாக்குச்சீட்டுகள் இரண்டும் காணப்பட்டன. என்ன ஆச்சரியம்! மொத்தத் தொகை சரியாக 25,000 டாலரை எட்டிவிட்டிருந்தது! அனைவரும் முழங்காற்படியிட்டு தேவனைத் துதித்தார்கள்!

கிறிஸ்துவை அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிக்கு, ரூத் அம்மையார் கூறியபடியே, 'தீர்மான நேரம்' (The Hour of

Decision) என்று பெயரிட்டனர். ஜார்ஜ் வில்சன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

கிளிப் பாரோஸின் தலைமையில் பாடகர் குழுவின் இசை, பீவர்லி ஷீயின் பாடல், கிரேடி வில்சனின் வேதபாட வாசிப்பு, அன்பின் மூலம் கிறிஸ்தவ சமாதானத்தைப் பெறுவது எப்படி என்ற பில்லி கிரகாமின் அருளுரை இவை கொண்ட முப்பது நிமிட நிகழ்ச்சி, 1950 நவம்பர் 5ஆம் நாள், ABC வானொலியின் 150 நிலையங்கள் மூலமாக ஒலிபரப்பாகியது.

ஐந்து வாரங்களுக்குள்ளாக இலட்சக்கணக்கான நேயர் களின் பாராட்டையும், உதவியையும் பெற்றுவிட்டது இந்நிகழ்ச்சி.

1955க்குள்ளாக உலகெங்கிலுமுள்ள 850 நிலையங்கள் மூலமாக 'தீர்மானநேரம்' வாரம்தோறும் ஒலிப்பரப்பப்படும் நிலையடைந்தது. வாரம்தோறும் புதுப் புது அருளுரைகளைத் தயாரிக்க வேண்டியிருந்ததால் பில்லி கிரகாம் வேத ஆராய்ச்சி யில் தீவிரமாக இறங்கினார்.

இன்று ஆயிரக்கணக்கான நிலையங்கள்மூலம் ஒலிப்பரப்பப்படும் இந்நிகழ்ச்சியைக் கேட்டு இலட்சக்கணக்கான நேயர்கள் கடிதம் எழுதுகின்றனர். ஆலோசனை வேண்டி எழுதுபவர்களுக்கு ஆலோசனை நூல்கள் அனுப்பப்படுகின்றன. மனந்திரும்புகிறவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறிச் செல்லுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்த வானொலி நற்செய்திப் பணியின் அலுவல்களைக் கவனிப்பதற்கென்றே ஜார்ஜ் வில்சனின் நிர்வாகத்தின்கீழ் நூற்றுக்கு மேற்பட்ட சிப்பந்திகள் கொண்ட அலுவலகம் ஒன்றும் இயங்கி வருகிறது!

கிரீன் வில்லி என்ற இடத்தில், கிளிப் பாரோசைத் தயாரிப் பாளராகக் கொண்ட ஒலிப்பதிவு நிலையமொன்றும் உள்ளது.

இந்நிலையம் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வானொலி நிலையத்துக்கு அனுப்ப, அங்கிருந்து அவை உலகமெங்கும் ஒலிபரப்பப்படுகின்றன.

பத்திரிகைகள்

பில்லி கிரகாமின் முயற்சியின்பேரில் 1956ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 'கிறிஸ்டியானிடி டுடே' என்ற மாதமிரு முறை இதழ் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய சமுதாயப் பிரச்சினைகளுக்கு வேதாகம அடிப்படையில் தீர்வுகளைக் காணவும், நமது வாழ்க்கையில் நற்செய்தியின் அம்சங்களைச் செயல்படச் செய்யவும் சிறந்த, தரமான கட்டுரைகளை வெளியிடுவதே இப்பத்திரிக்கையின் நோக்கம்.

பில்லி கிரகாமின் மாமனார் டாக்டர் நெல்சன் பெல் தனது மருத்துவப் பணியை விட்டுவிட்டு இந்த இதழின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பேராசிரியர் கார்ல் எஃப். எச். ஹென்றி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

இன்று மூன்று இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் இந்த இதழ், பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவைச் சேர்ந்தது அல்ல; தனியாகவே நிர்வகிக்கப்படுகிறது.

சாதாரண மக்களும் படிக்கும்படியாகவும், பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களைப்பற்றிய செய்திகளுடனும் பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவின் சார்பில் 'தீர்மானம்' (Decision) என்ற பத்திரிகை 1960 நவம்பர் முதல் மாதம்தோறும் வெளியாகிறது.

பில்லியின் அருளுரை, சாட்சிக் கட்டுரைகள், வேதபாடக் குறிப்புகள், எழுப்புதல் கூட்டச் செய்திகள் போன்ற அம்சங்கள் கொண்டது இந்த இதழ். 2,53,000 பிரதிகளுடன் ஆரம்பித்த இப்பத்திரிக்கை இன்று 55 இலட்சம் பிரதிகள் விநியோகமாகிறது. இந்த இதழில் விளம்பரமே கிடையாது!

ஸ்பானிய, சீன, ஜப்பானிய மொழிகளிலும் இந்த இதழ் வெளியாகிறது. மாதம்தோறும் இந்தப் பத்திரிகைக்காக மட்டுமே 400 டன் காகிதம் செலவாகிறதாம்!

திரைப்படங்கள்

1951ஆம் ஆண்டு ஹாலிவுட் எழுப்புதல் கூட்டத்தில் மனந் திரும்பிய நடிகர்கள், திரைப்படத் தொழிலாளிகள் இவர்கள் உதவியுடன் 'திரு. டெக்சாஸ்' என்ற முதல் திரைப்படம் எடுக்கப் பட்டது.

1951 அக்டோபர் மாதம் இது முதன்முதலாக ஹாலி வுட்டில் திரையிடப்பட்டது. கண்டுகளித்த 25,000 பேர்களில் 500 பேர் மனம்திரும்பினர்.

1951இல் திரைப்படங்களைத் தயாரிக்கவும், விநியோகிக் கவும் 'அகில உலக படக் குழு' (Worldwide Pictures) அமைக்கப் பட்டது. இன்று பில்பிரௌனின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இந்த நிறுவனம் அமெரிக்காவெங்கும் ஐந்து விநியோக நிலையங்கள் வைத்துள்ளது.

கலிபோர்னியா மாநிலத்தில் பர்பாங்க் என்ற இடத்தில் நவீன வசதிகள் கொண்ட படப்பிடிப்பு நிலையம் ஒன்றும் உள்ளது. சிறைச்சாலைகள், ஆலயங்கள், கல்லூரிகள் இவை களில் நற்செய்தித் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன.

இந்தத் திரைப்படங்கள் பெரும் பாராட்டைப் பெற்றிருப்ப தால், வியாபார நோக்குடைய திரையரங்குகள்கூட இப்படங்களைத் திரையிடுகின்றன.

பெரிய எழுப்புதல் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் செ.ய்திப் படமாகவும் தயாரிக்கப்படுவதுண்டு. ஆஸ்திரேலியா தயாரிக்கப்பட்ட 'பூமராங்கின் நிழல்' (The Shadow of Boomerang) பெரும் பாராட்டைப் பெற்றது.

1964இல் நியூயார்க் உலகப் பொருட்காட்சியில் பில்லி கிரகாம் அரங்கில் 'ஐந்தாவது பரிமாணத்தில் மனிதன்' (Man in

the Fifth Dimension) என்ற திரைப்படம் காட்டப்பட்டது. மனிதனின் வீழ்ச்சியையும், கிறிஸ்துவின்மூலம் இரட்சிப்பு அருளப்படுவதை யும் எடுத்துக் கூறுகிறது இத்திரைப்படம்.

1965இல் வெளிவந்த 'சமாதானமற்ற இளைஞர்' (Restless Ones) இலட்சக்கணக்கான இளைஞர்களை நல்வழிப்படுத்தியது. 'ஒரு பென்னிக்கு இரண்டு' (Two a Penny) என்ற திரைப்படமும் இளையர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது.

மனந்திரும்பிய பிரிட்டிஷ் நடிகர், இளைஞர் கிளிப் ரிச்சர்ட் இதன் கதாநாயகனாக நடித்தார்.

இவை தவிர 'ஓடுவதற்கான நேரம்' (TimetoRun), 'லூசியா' (Lucia), 'பீட்டருக்காக' (For Peter's Sake), 'இழந்த தலைமுறை' (The Lost Generation) என்ற திரைப்படங்களும் இளைஞர்களுக்காகத் திரையிடப்பட்டுள்ளன.

1970இல் இஸ்ரேல் நாட்டைப் பின்னணியில் கொண்ட 'அவருடைய நாடு' (His Land) என்ற வண்ணப்படம் இஸ்ரேல் மக்கள்மீது பில்லி கொண்ட அக்கறையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

யூத மக்களுக்குக் கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டுவது என்ன என்பதைச் சுட்டிக் காட்டும் நோக்கத்துடன் 'ஒளியும் இடம்' (Hiding Place) என்ற திரைப்படம், பிரமாண்டமான அளவில் 20 இலட்சம் டாலர் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தன் முதிர்வயதுவரை நற்செய்திப்பணி செய்து வந்த கோரி டென் பூம் (Corrie ten Boom) என்ற அம்மையாரின் கதையே இத் திரைப்படம். இரண்டாவது உலகப் போர் நடை பெற்ற வேளையில் நூற்றுக்கணக்கான யூதர்கள், ஹிட்லரின் கொடுமைக்குப் பயந்து நெதர்லாந்து நாட்டு ஹார்லெமில் இருந்த கோரியின் வீட்டில் ஒளிந்து வந்தார்கள். இந்தச் செய்தி நாசிக்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது!

கோரியும், அவரது தங்கை பெட்சியும் சிறையில் தள்ளப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர். சிறையில் பெட்சி மரணமடைந்துவிட்டார். ஒரு சிறை அலுவலரின் தவற்றால் மற்றொருவருக்குப் பதிலாக கோரி விடுதலை செய்யப்பட்டார். மற்ற அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

விசுவாசத்துடன் வெளியேவந்த கோரி தன் முதிர் வயது வரை தான் பெற்ற இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனைவரும் பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் நற்செய்தியை அறிவித்து வந்தார்!

தொலைக்காட்சி

'தீர்மான நேரம்' என்ற பெயரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒவ்வொரு ஞாயிறு இரவும் ஒளிபரப்பப்படுகின்றன. டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த இரு நண்பர்கள் சேர்ந்து அளித்த 50,000 டாலர் நன்கொடையே இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தன.

இன்று எழுப்புதல் கூட்டங்களின் அருளுரைகளும் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. வானொலி நிகழ்ச்சிகளைக் கவனித்து வரும் கிளிப் பாரோஸ் இதையும் நிர்வகித்து வருகிறார். தொலைக்காட்சி மூலம் நற்செய்தியை கேட்டுப் பதிலெழுதும் இலட்சக்கணக்கானவர்களுடன் தொடர்பு கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

8

எழுப்புதல் கூட்டங்களின் வல்லமை!

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள நாக்ஸ்வில் நகரத்தைச் சேர்ந்த 49 பேர், பில்லி கிரகாமைக் காண அவருடைய இல்லத்துக்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த பொருளைக் கண்டு பில்லி கிரகாம் ஆச்சரியப்பட்டார்.

ஒரு மாபெரும் பேப்பர் சுருளை அவர்கள் பில்லியிடம் கொடுத்தார்கள். தங்கள் நகருக்கு பில்லி கிரகாம் வந்து, எழுப்புதல் கூட்டங்களை நடத்தவேண்டுமென்ற விண்ணப்பமே அது. மொத்தம் 1,29,000 பேர் கையெழுத்திட்டிருந்தார்கள்!

அவர்களில் 13 பேர் மேயர்கள், 5 பேர் கல்லூரி முதல்வர்கள்! பதினாறு ஆண்டுகளாக, தங்கள் ஊரில் பில்லி கிரகாம் ஓர் எழுப்புதல் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று ஜெபித்து வந்த நகர மக்களின் விருப்பம், 1970ஆம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி நிறைவேறிற்று!

எழுப்புதல் கூட்டங்களுக்கான ஆயத்தம்

தோல் பெட்டிகளிலும், பைகளிலுமாக ஏராளமான விண்ணப்பங்கள் இதுபோல் வந்து குவிகின்றன. உள்ளூரிலுள்ள சபைகளில் பெரும்பான்மையானவை ஒத்துழைத்தால் தான் பில்லி கிரகாம் எழுப்புதல் கூட்டங்களை நடத்தச் சம்மதிப்பது வழக்கம்.

உள்ளூர்ச் சபைகள் ஒத்துழைக்காவிட்டால், மனம் மாறிய விசுவாசிகளைப் பின்னர் கவனிக்க யாருமின்றி, அவர்கள் பின் வழுவிச் செல்ல நேரிடும் என்பதை அவர் அனுபவத்தின்மூலம் கண்டறிந்திருந்தார். சில எழுப்புதல் கூட்டங்களில் இரண்டாயிரம் சபைகள்கூடப் பங்கு பெறுவதுண்டு!

எழுப்புதல் கூட்டம் நடத்துவதற்கான தீர்மானம் எடுக்கப் பட்டவுடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு கூட்டத் தொடர் நடத்த 2,50,000 டாலர்கள் வரை செலவாகிறது.

இதற்கான நிதி கூட்டம் நடக்கும் இடத்திலிருந்தே திரட்டப்படுகிறது. நற்செய்திக் குழுவினரின் போக்குவரத்து மற்றச் செலவுகளுக்கான தொகை பில்லி கிரகாம் நற்செய்திக் குழுவின் நிதியிலிருந்து எடுக்கப்படுகிறது.

கூட்டத்தின் அன்றாடச் செலவுகளுக்கான தொகை தினசரி காணிக்கையிலிருந்தே கிடைத்துவிடுகிறது. கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளுக்குச் செலவாகும் தொகைக்கான நிதி 'எழுப்புதல் கூட்டப் பங்காளிகள்' மூலம் கிடைக்கிறது.

நற்செய்திக் குழுவின் மாத வெளியீடான 'தீர்மானம்' இதழின் சந்தாதார்களில், அந்தக் குறிப்பிட்ட நகரத்தைச் சுற்றிலும் 50 மைல் அளவில் குடியிருப்பவர்களின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது.

அவர்களில் நன்கொடை அனுப்ப வாக்களிப்பவர்கள் 'எழுப்புதல் கூட்டப் பங்காளி'களாகின்றனர். இவர்கள்மூலம் கிடைக்கும் தொகை முன்னேற்பாடுகளைச் செவ்வனே செய்யப் பெரிதும் துணை புரிகிறது.

அந்தக் குறிப்பிட்ட இடத்தில் எழுப்புதல் கூட்ட அலுவலகம் ஒன்று திறக்கப்படுகிறது. ஓர் இயக்குநரின்கீழ் செயலாளரும், பிற சிப்பந்திகளும் இணைந்து செயல்படுகின்றனர்.

அந்த நகரம் நிலவியல் அமைப்பின்படி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலுள்ள ஆண்கள், பெண்கள், இளைஞர், போதகர்கள் இவர்களுடன் தொடர்புகொள்ள தலைவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

ஆண்கள், பெண்கள், இளைஞர் இவர்களுக்காக தனித் தனியே வேதபாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சாதாரண மாக எழுப்புதல் கூட்டம் துவங்குவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் இந்த வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

பிரிவின் தலைவர்கள் தங்கள் பிரிவிலுள்ள ஒவ்வொரு இல்லத்துக்கும் சென்று ஜெப வேண்டுதல்களை விடுக்கின்ற னர். பத்து இருபது குடும்பங்களைச் சேர்த்து ஜெபக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன!

வானொலி ஒலிபரப்புகள் மூலம் இந்த ஜெபக் குழுவிற்குத் தேவையான தியானங்களும், ஜெபங்களும் ஒலிபரப்பப்படுகின்றன. பெரிய எழுப்புதல் கூட்டங்களில் இப்படிப்பட்ட ஐயாயிரம் ஜெபக் குழுக்கள் வரை அமைக்கப்படு கின்றன.

'ஆன்ட்ரூஸ் இயக்கம்' (Operation Andrew) என்ற அமைப்பு ஒவ்வொரு எழுப்புதல் கூட்டத்திலும் செயல்படுகிறது. பேதுருவின் சகோதரனான அந்திரேயா, இயேசுவைச் சந்தித்த பின்னர், தன்னுடைய சகோதரனையும் அழைத்துச் சென்றார்.

அதைப்போன்று ஒவ்வொரு சபை அங்கத்தினரும், சபையில் சேராத மற்றொருவரைக் கூட்டங்களுக்குக் கூட்டி வர வேண்டும். இதுவே 'ஆன்ட்ரூஸ் இயக்கம்' என்றழைக்கப் படுகிறது. இந்த இயக்கத்தில் சேரும் சபைகளுக்கு, கூட்டம் நடைபெறும் அரங்கில் இடம் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

நற்செய்திக் கூட்டத்தில் மனம்திரும்பி, மேலும் கிறிஸ்துவைப்பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கு ஆலோசனை கள் அளிப்பதற்காக, ஆயிரக்கணக்கான ஆலோசகர்களும்,

நற்சேய்தி ஊழியர்களும் சபைகளின் ஒத்துழைப்புடன் பயிற்று விக்கப்படுகின்றனர்.

இதற்கான பயிற்சி வகுப்புகள் ஆலயங்களில் வாரம் தோறும் நடத்தப்படுகின்றன. இவர்கள் தவிர பெரியோர்களுக் கும், இளைஞர்களுக்கும் வேத பாட வகுப்புகள் நடத்தும் குழுத் தலைவர்களும் போதுமான பயிற்சி பெறுகின்றனர்.

எழுப்புதல் கூட்டம் நடைபெறுவதைப் பற்றிய அறிவிப்பு கள், துண்டுப் பிரதிகள், சுவரொட்டிகள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி இவைமூலம் விளம்பரப்படுத்தப் படுகின்றன.

நற்செய்தியாளர் பயிற்சிப்பள்ளி

1961ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தின்போது முதன்முதலாக இறையியல் பயிலும் மாணவர்களுக்கு நற்செய்திப் பணியில் பயிற்சியளிக்கப் பட்டது.

பின்னர் லோவல் பெர்ரி என்பவரின் முயற்சியால் போதகர்களுக்கும், நற்செய்திப் பணியாளர்களுக்கும் இப்பயிற்சி விரிவுபடுத்தப்பட்டது. எழுப்புதல் கூட்டம் நடைபெறும் இடங்களில், போதகர்களுக்கும், ஆர்வமுள்ள சபை மக்களுக் கும், சாட்சி பகருவது, அருளுரையாற்றுவது, மனம் திரும்பியவர் களை வழிநடத்துவது இவற்றில் பயிற்சியளிக்கின்றனர்.

பில்லி கிரகாமின் குழுவைச் சேர்ந்தவர்களும், பெரிய சபைப் போதகர்களும் இந்த வகுப்புகளை நடத்துகின்றனர். ஆண்டொன்றுக்கு 2,50,000 டாலர்கள் இந்தப் பணிக்காகச் செலவழிக்கப்படுகிறது.

எழுப்புதல் கூட்டம்

அமெரிக்காவில் எழுப்புதல் கூட்டம் நடக்கும்போது, நெரிசலில் சிக்காமலிருப்பதற்காக, ஒரு மணி நேரத்துக்கு

முன்பாகவே டிரெய்லர் ஒன்றில் பில்லி கிரகாம் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சென்றுவிடுவார்.

ஓய்வெடுப்பதற்கான வசதிகளும், தொலைபேசித் தொடர்பும் அமைந்த டிரெய்லர் அது. கூட்டம் துவங்கும் வரை முக்கியமானவர்களைச் சந்திப்பதற்கும், ஜெபிப்பதற்கும் அந்த டிரெய்லர் வசதியாக உள்ளது. கூட்டத்தில் கலந்துகொள்ளும் பில்லி கிரகாம் குழுவினர் ஒவ்வொருவரும் தங்களுக்கிடையே தொடர்பு கொள்ளுவதற்கேற்ற 'வாக்கி–டாக்கி' என்ற வானொலி சாதனத்தை வைத்திருப்பர்.

கூட்டத்தில் திடீரென்று சுகவீனமடைகிறவர்களுக்கு முதலுதவி செய்ய வெள்ளை உடை அணிந்த மருத்துவர்களும் ஆங்காங்கே அமர்ந்திருப்பர்.

கிளிப் பாரோஸின் தலைமையில் பாடகர் குழு இன்னிசை யளிக்கத் துவங்கும். உள்ளூர் பாடகர்களும் இந்தக் குழுவில் சேர்ந்து பயிற்சி பெறுவர். சில வேளைகளில் பாடகர் குழுவில் மட்டும் **5000** பேர் இருப்பாராம்!

இசை விருந்துக்குப் பின்னர் ஜார்ஜ் பீவர்லி ஷீ நற் செய்திப் பாடல்களைப் பாடுவார். உதவி நற்செய்தியாளர் வேதபாடம் வாசிக்க, ஜெபம் ஏறெடுக்கப்படும். இரட்சிக்கப்பட்ட சிலர் சாட்சி பகருவார்கள்.

பில்லி கிரகாம் தனது குழுவின் புதிய திட்டங்களை விளக்கி மக்களின் ஆதரவைக் கோருவார். ஆபத்துதவி நிதி போன்ற நிதிகளுக்கு இவ்வேளையில் காணிக்கைகள் சேகரிக் கப்படும். மீண்டும் பாடகர் குழு இன்னிசையளிக்கும்போது பில்லி கிரகாம் தலைகுனிந்து ஜெபத்தில் மூழ்கியிருப்பார்.

இசை மழை நின்று எங்கும் அமைதி நிலவும். இதற்குள் பிரசங்க மேடைக்குச் சென்றிருக்கும் பில்லி கிரகாம் மெல்லிய குரலில் ஒருவரோடு உரையாடல் செய்வது போன்ற தொனியில் அருளுரையாற்றத் துவங்குவார். இந்த ஆரம்பமே அனைவரை



வேதாகம அதிகாரத்தோடு பேசுகிறார் பில்லி கிரகாம்

யும் அவருடைய அருளுரையைக் கூர்ந்து கவனிக்குமாறு தூண்டிவிடும்.

கூட்டத்திலுள்ள அனைவரையும் கவர்ந்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பில்லி கிரகாம் அருளுரையாற்றுவது கிடையாது. கூட்டத்திலுள்ள யாரேனும் ஒருவருக்குத் தன்னுடைய உள்ளத்தில் உள்ள கருத்துக்களை, உணர்ச்சிகளை எடுத்துக்கூறி அவரை முற்றிலுமாக ஆட்கொண்டுவிட வேண்டும் என்ற உண்ர்வுடன், அவரோடு முகமுகமாகப் பேசுவது போன்ற குரலில் பேசுவார்.

இதனால் கூட்டத்திலுள்ள அனைவருக்குமே அந்த அருளுரை தனக்காகத்தான் பேசப்படுகிறது என்ற உணர்வு ஏற்பட்டு, மேலும் அவருடைய வார்த்தைகளைக் கவனமாகக் கவனிக்க முற்படுகிறார்கள்.

அமைதியாகத் துவங்கிய அருளுரை விரைவிலேயே வல்லமையையும், வேகத்தையும் பெறுகிறது. அவருடைய கண்கள் ஒளிவீசுகின்றன. தனது நீண்ட கரங்களை அசைத்து, தனது கருத்துக்களைக் கேட்பவர்கள் மனதில் பதியவைக்கும் வண்ணம் வலியுறுத்துவார்.

நீண்ட கரங்களில் வேதாகமத்தை உயர்த்திப் பிடித்தவாறு, தனது அருளுரையின் ஏற்றத் தாழ்வுக்கேற்ப மேடையில் அங்கும் இங்கும் சென்று, கேட்பவர்களின் கவனத்தைச் சிதற விடாதபடி செய்து விடுவார். அருளுரை முடிவடையும் தறுவாயில், மீண்டும் அவருடைய குரல் சாந்தமடையும்.

வார்த்தைகளின் வழியாக அவருடைய கருணையும் கரிசனையும் புலப்படும். நீண்ட கரங்களுடன் அசையாமல் நிற்கும் பில்லி கிரகாம், கெஞ்சலும், அதிகாரமும் கலந்த குரலில் மனம்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்கிறவர்களை எழுந்து முன்னே வரும்படி வேண்டுவார்.

ஒரு கணநேரம் எங்கும் ஒரே நிசப்தம். பின்னர் ஒருவர் பின் ஒருவராகக் கலங்கிய கண்களுடன், உடைந்த உள்ளத்

துடன் அநேகர் முன்னே வருவதைக் கண்டு தேவனைத் துதிப் பார்.

பில்லி கிரகாமின் அருளுரை

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்".

தன்னுடைய அருளுரையில் மனிதன்மீது தேவன் கொண்டுள்ள அன்பையும், கரிசனையும் எடுத்துக்கூற பில்லி கிரகாம் தவறுவதேயில்லை. கூட்டத்திற்கு வரும் அநேகர் பயங்களாலும், சந்தேகங்களாலும் பீடிக்கப்பட்டவர்களாய், உள்ளத்தில் சமாதானம் இன்றி, வெறுமையான வாழ்க்கை வாழ்பவர்களே என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

அவர்களுக்கு ஆறுதலளிக்கும் வசனங்களை எடுத்துக் கூறி தேவனுடைய அன்பைப் புலப்படுத்துவார். நமக்காகச் சிலுவையில் மாண்ட கிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் விவரித்து, மனம்திரும்பி இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும்படி ஊக்குவிப்பார். கலக்க முற்றுள்ள உள்ளங்கள், தேவன் அருளும் மெய்ச் சமாதானத் தைப் பெற்று நிம்மதியடைய வேண்டுவார்.

அருளுரையின் நடுவே சிறு கதைகளைக் கூறி, கேட்பவர் களின் கவனத்தைத் தூம்டுவதில் பில்லி கிரகாம் திறமை படைத்தவர். ஒரு முறை போதகர்கள் கூட்டமொன்றில் அவர் கூறிய சிறுகதை சுவையானது.

பெரியவர்களுக்காக நடைபெறும் ஒய்வுநாட் பள்ளிக்குக் கணவனைச் செல்லுமாறு வற்புறுத்தினாள் ஒரு மனைவி. அதற்கு அவள் கூறிய காரணங்கள் மூன்று.

முதலாவது அவரை நல்ல பிள்ளையென்று நினைத்திருக் கும் அன்னையின் நம்பிக்கையை வீணாக்கலாமா? இரண்டா

வது நாற்பது வயதுக்கு மேற்பட்ட அவர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டாமா? மூன்றாவது அந்த சபையின் போதகரே அவர்தானே!

தனது நற்செய்திப் பணிக்கு நான்கு முக்கிய நோக்கங்கள் உண்டு என்று பில்லி கிரகாம் கூறியுள்ளார். முதலாவது மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்கவேண்டும். இரண்டாவது மனிதனை சக மனிதனுடன் ஒப்புரவாக்க வேண்டும். மூன்றாவது துன்பப்படும் மனித சமுதாயத்துக்கு உதவியளிக்க வேண்டும். கடைசியாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தத்துடன் காத்திருக்கவேண்டும்.

சமுதாய பிரச்சினைகளைப்பற்றித் தன்னுடைய அருளுரைகளின் மூலம் பில்லி கிரகாம் அடிக்கடி விவாதிப்பதுண்டு. "மனிதனின் இதயத்தை மாற்றாமல், உலகத்திலிருந்து வெறுப்பையும் இச்சையையும், பேராசையையும் விரட்டி விட முடியும் என்று நான் நினைக்கவில்லை. தன்னுடைய அயலானை உண்மையாக நேசிக்கவேண்டுமானால், மனிதன் முதலில் தேவனை நேசித்தால்தான் அது இயலும். திருச்சபைகள் நற்செய்தியை அறிவிக்கும் பணியில் மேலும் ஈடுபட்டு, தனி மனிதனின் மனதை மாற்றினால்தான் உண்மையான சமுதாய முன்னேற்றத்தை அடைய முடியும்" என்று அவர் கூறியுள்ளார்.

பில்லியால் மனம்திரும்பிய எத்தனையோ பேர் இன்று சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். உலக சமாதானத்துக்காக ஐந்து வழிகளை பில்லி கிரகாம் அறிவித்துள்ளார்: மனம்திரும்புதல், கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்ளுதல், ஆவிக்குரிய மறுமலர்ச்சி, மனத்தாழ்மை, ஐக்கிய ஜெபம்!

"தேவனுடைய உண்மையான ஊழியரான பில்லி, அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அவர் கூறுவதைத் தைரியமாக எடுத்துச் சொல்லும் வல்லமை பெற்றவர்" என்று டாக்டர் இ.வி. ஹில் கூறியுள்ளார். வேதாகமத்தையே தன்னு

டைய அஸ்திவாரமாக ஏற்றுள்ள பில்லி கிரகாமின் அருளு ரைகள் வல்லமை பெற்று விளங்குவதில் வியப்பொன்றும் இல்லையே?

மனம் திரும்பிய கூட்டத்தினர்

தான் மொர்தேகாயின் அருளுரையைக் கேட்டு மனம் திரும்பியபோது, எவ்வாறு கூட்டத்தின் முன்னால் சென்று முழங்காற்படியிட்டாரோ, அது போன்றே பில்லி கிரகாம் தன்னுடைய எழுப்புதல் கூட்டங்களிலும் மனம்திரும்பியவர்கள் முன்னே எழுந்து வரும்படி வேண்டுகின்றார்.

மெல்போர்ன் கூட்டத்தின்போது மழையில் எழுந்து வந்த ஆயிரக்கணக்கானோர், சேறும் சகதியுமாயிருந்த தரையிலேயே முழங்காற்படியிட்டார்களாம்! இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றிருந்த அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை!

மனந்திரும்பியதை வெளியே அறிவிக்கும் விதமாகவும், மற்ற கிறிஸ்தவர்கள் அவர்களைக் கண்டுகொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடனும் ஆலோசகர்கள் அவர்களைக் கண்டு ஆலோசனை கூற வசதியாகவும், மனம்திரும்பியவர்கள் முன்னே வரும்படி அழைக்கப்படுகின்றனர்.

ஒருமுறை ஒரு பதினைந்து வயதுப் பையனின் பெற்றொர் இரண்டு நாட்களாக எழுப்புதல் கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். மூன்றாவது நாள் பையனையும் அழைத்து வந்தார்கள்.

முன்னே வந்து முழங்காற்படியிட்ட பையனிடம் ஆலோ சகர் கேட்டபோது, "நான் நேற்றே அப்பாவின் பேச்சைக் கேட்டுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுவிட்டேன். இன்று மற்றவர்களும் நான் இரட்சிப்படைந்ததைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் முன்னால் வந்தேன்" என்றானாம்!

எழுப்புதல் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பே ஆயிரக் கணக்கானோர் ஆலோசகர்களாகப் பயிற்சியளிக்கப்படு கின்றனர். அவர்களுடைய சந்தேகங்கள் நிவிர்த்திசெய்யப்பட்டு மனம்திரும்பியவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி எவ்வாறு எடுத்துக் கூறுவதென்று கற்பிக்கிறார்கள். இந்தப் பயிற்சிக் கூட்டத்திற்கு வந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களும் உண்டு.

ஆலோசகர்கள் பல குழுவினராக எழுப்புதல் கூட்டம் நடைபெறும் இடமெங்கும் பரவலாக அமர்ந்திருப்பர். மனம் திரும்பியவர்கள் எழுந்து செல்லும்போது, குழுத்தலைவரின் அனுமதியைப் பெற்று அவர்களுடனே முன்னே செல்வர். ஒருவருக்கு ஓர் ஆலோசகர் வீதம் இளைஞர்கள், இளைஞர்களையும், படித்த ஆலோசகர், படித்தவரையும் தொடர்ந்து சென்று அவர்களுடனே முழங்காற்படியிடுவார்கள்.

மனம் திரும்பியவர்கள் தங்களைப்போன்றே ஆலோசகர் களும் இருந்தால், மனம் திறந்து பேசுவார்கள் என்பதினாலேயே இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலோசகர்கள் முன்வருபவரின் மனக் கவலைகளுக்கு ஆறுதலான வசனங்களை எடுத்துக் கூறுவர். அவர்களுடனே சேர்ந்து ஜெபிப்பர். பின்னர் ஓர் அட்டையில் மனம் திரும்பியவரின் பெயர், விலாசம், தொலைபேசி எண் இவை எழுதப்படும்.

ஆலோசகர் அவரை அழைத்துச் சென்று முதிய ஆலோசகரிடம் அவருடைய பெயரை மட்டும் சொல்லி அறிமுகப் படுத்துவார். அநேகமாக போதகர்களே முதிய ஆலோசகர்களாக இருப்பர். அவர் மனம்திரும்பியவரிடம் அவரைச் சந்திக்க வந்ததின் நோக்கமென்ன என்று கேட்பார்.

இதனால் மனமாற்றமடைந்தவர் தான் இரட்சிப் படைந்ததைப்பற்றி விவரிக்கத் தூண்டப்படுகிறார். இவ்வாறு முதன்முதலாக சாட்சி பகரும் பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.

பின்னர் போதகர் கிறிஸ்துவைப்பற்றியும், வேதாகமத்தைப் பற்றியும் அவருக்கு எழும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து சிறப்பான கிறிஸ்துவ வாழ்க்கை வாழ வழிகாட்டுவார். தேவையான சிறு வெளியீடுகளையும் வழங்குவார்.

எழுப்புதல் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஆலோசகர்கள் தாங்கள் நிரப்பிய அட்டைகளை கூட்ட அலுவலகத்துக்கு கொண்டுவருவர். அங்கு ஒவ்வொரு அட்டையின் மூன்று பிரதிகள் தயாரிக்கப்படும்.

இந்தப் பணியில் உள்ளூரிலுள்ள கிறிஸ்தவர்கள் உதவி செய்வர். பெரிய பெரிய நீதிபதிகளும், தொழிலதிபர்களும் நள்ளிரவுக்குப் பின்னர் அமர்ந்து பிரதிகளைத் தயாரிப்பதைக் காண்போர் வியப்படைவர்!

மூன்று பிரதிகளில் ஒன்று உள்ளூர் எழுப்புதல் கூட்டக் குழுவுக்கும், மற்றொன்று மின்னியாபோலீஸ் அலுவலகத் துக்கும், மூன்றாவது, அட்டை.யில் காணப்படுவோர் தங்கி யிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள சபையின் போதகருக்கும் அனுப்பப்படும்.

அந்தப் போதகர் அவரை அடிக்கடி சந்தித்து அவர் சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கை நாம் வாழ வழிகாட்டுவார். ஆலோ சகர்களும், நற்செய்திக் குழுவினரும் அவருக்காகத் தொடர்ந்து ஜெபித்து வருவார்கள்.

இதனால் மனம் திரும்பியவர் தொடர்ந்து, பின்வழுவாமல் கிறிஸ்தவராக, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்வார் என்பதில் ஐயமில்லை!

9

கிறிஸ்துவின் செயல்வீரர் பில்லி கிரகாம்

நெடிய உருவம், ஆரோக்கியமான உடல்வாகு, கச்சிதமான பல்வரிசை, அழகான நீல நிறக் கண்கள், பளிச்சென்ற புன்சிரிப்பு இவற்றுடன் காண்பவர்கள் மனதை உடனே கவர்ந்து விடுகிறார், அமெரிக்காவிலேயே அதிபருக்கு அடுத்தபடியாகப் பெருமதிப்புப் பெற்றிருக்கும் பில்லி கிரகாம்!

அவருக்கு விரோதமாகச் செயல்படுகிறவர்கள்கூட அவரை நேரில் சந்திக்கும்போது, அவருடைய நண்பர்களாகி விடுகிறார்கள்! பிளாரிடா வேதாகமப் பள்ளியில் படிக்கும் போதே பில்லி கிரகாம் அனைவருடைய கவனத்தையும் கவரக்கூடியவராக விளங்கினார்.

“அவர் ஒரு கூட்டத்தில் சென்று கொண்டிருந்தால், ஒரு சில நொடிகளுக்குள் அனைவருடைய கவனமும் அவரிடம் திரும்பிவிடும்” என்று ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இந்தத் தன்மையே எழுப்புதல் கூட்டங்களில் அனைவரையும் அவருடைய அருளுரையில் கவனமாக ஈடுபடச் செய்து விடுகிறது.

பணியில் சுறுசுறுப்பு

“பில்லி கிரகாமால் இரண்டு வாரங்கள்கூட ஓய்வு எடுக்க முடியாது. எதையாவது சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருக்

காமல் அவரால் வெறுமனே இருக்கமுடியாது" என்கிறார் ஹெரால்ட் லிண்ட்செல்.

பில்லி கிரகாம் எந்தப் பணியையும் கடமைக்காகச் செய்வது கிடையாது. ஒவ்வொரு பணியிலும் புது ஆர்வத்துடன் ஈடுபடுகிறார். வீட்டில் ஓய்வெடுத்திருக்கும்போதுகூட யாரேனும் அவரைச் சந்திக்க வந்தால் அவருக்கு நற்செய்தியை எடுத்துக் கூறத் தவறுவதில்லை. தன்னுடைய பணியில் என்றுமே அவர் பெருமை கொண்டது கிடையாது.

"என்னில் நான் ஒரு சக்தியுமற்றவன். ஒவ்வொரு ஊழியரையும் போலவே நானும் நற்செய்தியை எடுத்துக் கூறும் பணியில் ஈடுபட்டுள்ளேன். என்னால் யாரையும் மனந்திரும்பச் செய்ய முடியாது. தேவனே அவர்களை மனமாற்றம் அடையும்படி செய்கிறார். அவர் செயல்புரிவதற்கு நான் ஒரு கருவியாக மட்டுமே விளங்குகிறேன்.

"மனிதர்கள் இருக்கும்வரை பாவமும் உலகில் இருக்கும். பாவம் உலகில் இருக்கும்வரை கிறிஸ்துவைப்பற்றி அறிவிக்கும் ஊழியர்களும் இருப்பர். தேவனுக்குச் சித்தமானால் நானும் அவர்களில் ஓர் ஊழியனாகவே என்றும் இருப்பேன்" என்று பில்லி கிரகாம் கூறியுள்ளார்.

அமைதியான இல்லம்

ஒவ்வொரு முறை எழுப்புதல் கூட்டங்கள் நடந்து முடியும்போதும் தான் முழுமையாக வெறுமையாக்கப்படுவதுபோல உணர்கிறார் பில்லி கிரகாம்.

"சாத்தானோடு மல்யுத்தம் செய்து முடித்தது போன்ற உணர்வை நான் பெறுகிறேன். இந்த மக்கள் சுவிசேஷத்தின் தெளிவான செய்தியைக் கேட்காமல் தடுப்பதற்கு அவன் தனது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்கிறான்" என்று பில்லி குறிப்பிட்டுள்ளார்.

"பிரசங்கத்தை முடித்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் முன்னால் வரும்படி நான் அழைக்கும்போது, என்னிலிருந்து சரீரப்பிரகாரமான சக்தி வெளியே சென்று விடுவதுபோல உணர்கிறேன். நான் கடுமையான பலவீனமடைகிறேன்" என்று அவர் கூறுகிறார்.

இவ்வேளையில் அவர் கர்த்தருக்குள் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, தனது வீட்டுக்குச் சென்று ஓய்வெடுக்கிறார்.



மான்ட்ரீட் இல்லத்தில் பில்லி கிரகாம் தம்பதியர் தங்கள் பிள்ளைகளுடன் (பழைய படம்)

அமெரிக்காவில் வட கரோலினா மாநிலத்தில் இயற்கை யழகு சூழந்த மான்ட்ரீட் நகரத்தின் மலைச்சரிவு ஒன்றில் அமைந்துள்ளது பில்லியின் வீடு. கற்களினால் கட்டப்பட்ட வீடு அது. அதைச்சுற்றிலும் அழகான சிறு தோட்டம். அருகிலேயே கால்ப் மைதானம் ஒன்றும் உள்ளது. மலைச்சரிவில் தனியாக அமைந்திருப்பதால் பாதுகாப்புக்காக நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பில்லி கிரகாம் தொந்தரவின்றி படிப்பதற்கும், அருளுரைகளைத் தயார் செய்வதற்கும், எழுதுவதற்கும் ஏற்ற அமைதியான படிக்கும் கூடம் ஒன்றும் உள்ளது. பில்லி கிரகாமின் பணியில் அக்கறைகொண்ட ஒருவர் அமைத்துக் கொடுத்த அறை அது.

ஓய்வெடுக்கும் வேளையில் பில்லி கிரகாம் நாள்தோறும் ஐந்து சங்கீதங்கள், நீதிமொழிகள் நூலில் ஒரு அதிகாரம், மற்றும் வேதாகமத்தில் சில பகுதிகள் இவற்றைப் படித்து தியானம் செய்வார். இவ்வாறு தான் இழந்த பலத்தை அவர் கர்த்தருக்குள் திரும்பப் பெறுகிறார்.

பில்லி கிரகாம் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து நற்செய்திப் பணியில் ஈடுபடுவதற்கு அவர்மீது அன்புகொண்டு, அக்கறையுடன் அவருடைய தேவைகளைக் கவனித்துவரும் அருமை மனைவி ரூத் அம்மையாரே காரணம் என்பதில் ஐயமில்லை!

''ஆண்டவர் ரூத்தை என் மனைவியாகவும், முதன்மையான ஆலோசகராகவும் தெரிந்துகொண்டபோது, தாம் என்ன செய்கிறோம் என்பதை அவர் நிச்சயமாக அறிந்திருந்தார்" என்று பில்லி கிரகாம் குறிப்பிட்டுள்ளார்!

ரூத் பெல் அம்மையார்

ரூத் பெல் அம்மையார் பில்லிக்கு வழிகாட்டும் துணையாகவும், குழந்தைகளுக்கு அன்பான தாயாகவும்.

பில்லி கிரகாமின் குடும்பத்தார் (இடமிருந்து வலமாக: ஜிஜி, ஆனி, ரூத், திருமதி கிரகாம், பில்லி கிரகாம், பிராங்க்ளின், நெட் கிரகாம்)

வீட்டை நிர்வாகம் செய்வதில் திறமைசாலியாகவும் விளங்கி வருகிறார்.

துவக்க நாட்களில் சிறு குழந்தைகளை விட்டுவிட்டு பில்லி கிரகாம் தொடர்ந்து பல மாதங்களாக வெளியிடங்களில் ஊழியங்களை நடத்திவந்தபோதும் ரூத் முறுமுறுக்கவில்லை, மனம் கலங்கவில்லை!

கிறிஸ்துவைத் தன் மையமாகக் கொண்டுள்ள ரூத் எந்த நிலையிலும் சந்தோஷமாக இருக்கும் மனோபாவத்தைப் பெற்றிருக்கிறார். இந்த அவருடைய குணாதிசயமே அவருடைய கணவர் ஊழியத்தில் உறுதியான அஸ்திபாரத்தைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது.

ஊழியத்தினிடையே ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் வேறெங்காவது தங்கி ஓய்வெடுக்காமல் உடனடியாக வீட்டுக்குத் திரும்பிவரும் வழக்கத்தை பில்லி கிரகாம் கொண்டிருக்கிறார்.

ஊழியத்தில் புதிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் போதும், பிள்ளைகளை வளர்ப்பதிலும் மனைவியோடு சேர்ந்து ஜெபிப்பதற்கு பில்லி ஒருபோதும் தவறியது கிடையாது.

தொடர்ந்து இன்றுவரை 55 ஆண்டு கால ஆசீர்வாதமான மண வாழ்க்கையை அனுபவித்துவரும் இந்தத் தம்பதியினருக்கு வெர்ஜீனியா (1945), ஆனி (1958), ரூத் (1950), என்ற மூன்று பெண்பிள்ளைகளும், வில்லியம் (1950), நெல்சன் (1958) என்ற ஆண்பிள்ளைகளும் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளனர்!

இப்போது பில்லி கிரகாம் தம்பதியினர் 19 பேரப் பிள்ளைகளையும், 4 கொள்ளுப்பேரப் பிள்ளைகளையும் பெற்றுள்ளனர்! எவ்வளவு ஆசீர்வாதமான குடும்ப வாழ்க்கை!

ரூத் பெல் கிரகாம் தனது வாலிப வயதில் தனது பெற்றோரைப்போல சீனாவுக்கு ஊழியம் செய்யச் செல்ல வேண்டும் என்ற வாஞ்சை கொண்டிருந்தார்.

என்றாலும் ஒரு சர்வதேச நற்செய்தியாளருக்கு மனைவியாக இருக்க வேண்டும் என்ற தேவனுடைய அழைப்பை மறுக்காமல் ஏற்றுக்கொண்டார்!

தொடர்ந்து அவர் சீனாவுக்காக ஜெபித்துவரத் தவறுவதில்லை. சீனச் சபைத் தலைவர்கள் தன் கணவரைச் சந்திக்க வரும்போது, சீன விசுவாசிகளைப் பற்றிய செய்திகளை ஆவலோடு கேட்டுத் தெரிந்துகொள்வார்.

தனது இளைய மகன் நெல்சன் சீனாவுக்காக ஊழியத்தைத் துவக்கியபோது ரூத் சந்தோஷத்தோடு தேவனைத் துதித்தார்!

ரூத் நூல்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர். அவர் எழுதியுள்ள கவிதை நூல்கள் பிரசுரமாகியுள்ளன!

தனது கணவர் இலட்சக்கணக்கான மக்களுக்கு நற்செய்தி அறிவித்துவரும் வேளையில், ரூத் தனிநபர் ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார். அவரது அன்பான செயல்களாலும், ஆறுதலான சாட்சியினாலும் தொடப்பட்டு பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!

இப்போது முதிர்வயதில் (78) ரூத் கிரகாம் முடக்குவாத நோயினால் அவதிப்பட்டு வருகிறார். நோயின் வேதனையின் மத்தியிலும் மற்றவர்களை அவர் கிறிஸ்துவுக்குள் ஆறுதல் படுத்தி வருகிறார்.

"காத்தருக்குள் சந்தோஷமே அவருடைய பலமாக இருக்கிறது" என்று அவருடைய இளைய மகள் ரூத் குறிப்பிட்டுள்ளார்!

ஊழிய வாஞ்சை கொண்ட பிள்ளைகள்!

பில்லி கிரகாமின் ஆண்பிள்ளைகளான பிராங்க்ளினும், நெட் என்ற நெல்சன் எட்மனும் தங்கள் இளம் வாலிப பருவத்தில் பலவித சோதனைகளுக்கும் ஆளானார்கள்.

"சாத்தான் உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த விரும்புகிறான். உங்கள் ஆத்துமாவுக்காக அவன் போரிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள்" என்று பில்லி அவர்களை எச்சரித்தார்.

கணவனும் மனைவியும் தங்கள் பிள்ளைகளுக்காக ஊக்கமாக ஜெபித்து வந்தார்கள்.

தங்களுக்கு நேரிட்ட சோதனைகளை வெற்றிகண்ட பிராங்க்ளினும், நெல்சனும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தேவனுக்குத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தார்கள்.

இப்போது அவர்கள் இருவருமே ஊழியத்துக்காக அபிஷேகம் பெற்றிருக்கிறார்கள்!

பிராங்க்ளின் கிரகாம் (46 வயது) இப்போது *சமாரிட்டன் பர்ஸ், உலக மருத்துவ அருட்பணி* என்ற இரண்டு அருட்பணி நிறுவனங்களுக்குத் தலைவராக இருக்கிறார். 1989ஆம் ஆண்டு முதல் இவர் எழுப்புதல் கூட்டங்களில் நற்செய்தி அறிவித்து வருகிறார்.

நெட் கிரகாம் (40) *கிழக்கு வாசல்* ஊழியங்களைத் துவங்கி நடத்தி வருகிறார். சீனாவிலுள்ள சபைகளுக்கு இந்த நிறுவனம் உதவி வருகிறது!

அதிபர்களின் நண்பர் / நற்செய்தியாளர்களின் தோழர்

தொடர்ந்து பல அமெரிக்க அதிபர்களின் நெருங்கிய நண்பராக பில்லி கிரகாம் விளங்கி வருகிறார். பல முறை வெள்ளை மாளிகையில் அதிபர்களை ஜெபத்தில் வழிநடத்தி யிருக்கிறார் இவர்!

பிராங்க்ளின் கிரகாம் நற்செய்தி அறிவிக்கிறார்

"நீங்கள் பில்லியோடு இருக்கும்போதெல்லாம், உங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் உங்களை வழிநடத்துவதற்கும், உங்களுக்கு உதவுவதற்கும் அவர் உங்களோடு இருக்கிறார் என்ற சிறப்பான உணர்வைப் பெறுவீர்கள்" என்று ஜெரால்ட் போர்ட் தான் அதிபராக இருந்தபோது குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அதிபர்களுக்கு நெருக்கமாக இருக்கும் வேளையிலும், எங்கோ உலகத்தின் ஒரு மூலையில் ஊழியம் செய்துவரும் நற்செய்தியாளரையும் பில்லி கிரகாம் மறந்துவிடுவதில்லை.

அவருடைய கம்ப்யூட்டரில் உலகெங்கிலுமுள்ள 43,000 நற்செய்தியாளர்களின் பட்டியல் உள்ளது. தொடர்ந்து அவர்களுக்காக ஜெபித்துவரும் பில்லி கிரகாம், தான் அந்தந்தப் பகுதிகளில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தச் செல்லும்போது, அவர்களை அழைத்து நேர்முகப்பயிற்சி கொடுக்கிறார், கூட்டங்களில் சாட்சிகூற வாய்ப்புக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கிறார்.

உலகெங்கும் பரவிவரும் எழுப்புதல் அக்கினி அவியாமல் காக்கப்படுவதற்கு ஒவ்வொரு ஊழியரின் பணியும் அத்தியாவசியமானது என்று பில்லி கிரகாம் வற்புறுத்திக் கூறி வருகிறார்.

வேதனைகள் நடுவிலும் வல்லமையான ஊழியம்

இந்த ஆண்டு (1998) தனது எண்பதாவது வயதை எட்டியிருக்கும் பில்லி கிரகாம் பார்க்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். படிப்படியாக நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தும் கடுமையான நோய் இது! இப்போது அவரால் காரோட்டவோ, கையினால் எழுதவோ முடியாது!

என்றாலும் அவருடைய ஊழியம் இன்றும் வல்லமை கொண்டதாக விளங்கி வருகிறது.

1993ஆம் ஆண்டின் கணக்கின்படி பில்லி கிரகாமின் ஊழியத்தின்மூலம் 28,74,082 பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர்!

அவருடைய அர்ப்பணிப்பான ஊழியமும் தாழ்மையான வாழ்க்கையும் மட்டுமே இதற்குக் காரணமல்ல!

உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானோர் பில்லி கிரகாமின் ஊழியங்களுக்காக அனுதினமும் பரிந்துரை ஜெபங்களை ஏறெடுத்து வருகின்றனர்.

பிரிட்டனைச் சேர்ந்த முதிய பண்ணைத் தொழிலாளி ஒருவர் தினமும் தான் பால் கறக்கும்போது பில்லி கிரகாமுக்காக ஜெபிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதாக எழுதியிருக்கிறார்!

"எனது கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவும், சுவிசேஷத்தைப் பற்றி எழுதவும் நான் வாஞ்சிக்கிறேன். துப்பாக்கிக் குண்டினாலோ அல்லது புற்று நோயினாலோ அல்லது மாரடைப்பினாலோ நான் மரிக்க நேர்ந்தாலும் *இயேசுவானவர்* என்பதே எனது இறுதி வார்த்தையாக இருக்கும்'' என்று பில்லி கிரகாம் குறிப்பிட்டுள்ளார்.

''அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" (சங்கீதம் 118:23) என்று ஒவ்வொரு வெற்றியையும் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ளும் இவருடைய ஊழியம் தொடர்ந்து பலரைக் கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்தும்படி ஜெபிப்போமாக!

எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும் — சங்கீதம் 115:1.

பில்லி கிரகாம்
வாழ்க்கை வரலாறு

"கிறிஸ்தவ சபை வரலாற்றிலேயே இவருடைய வல்லமையான ஊழியத்தினால் மனந்திரும்பிய மக்களின் எண்ணிக்கைபோல வேறு எவருக்குமே இல்லை" என்ற சிறப்பைப் பெற்று விளங்குகிறார் பில்லி கிரகாம்!

கிறிஸ்துவின் செயல்வீரரான இவருடைய 50 ஆண்டுகால ஊழியத்தின்மூலம் 28,74,082 பேர் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்! இன்றும் தொடர்ந்து பல்லாயிரக்கணக் கானோர் இவ்வருடைய ஊழியத்தினால் தொடப்பட்டு வருகின்றனர்!

இந்த வல்லமையான ஊழியரின் இளமைப் பருவம், கல்வி, மனந்திரும்புதல், குடும்ப வாழ்க்கை போன்ற சுவையான செய்திகளோடுகூட அவரது உலகளாவிய நற்செய்திப் பணி பற்றிய விவரங்களும் புகைப்படங்களோடு கொடுக்கப் பட்டுள்ளன.

இவரது அற்புதமான வாழ்க்கை வரலாறு நமது விசுவாசத்தைப் பலப்படுத்தி, இன்றைய எதிர்ப்பு நிறைந்த உலகில் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக விளங்க நம்மை உற்சாகப்படுத்தும் என்பதில் ஐயமில்லை!

சிறுவர், இளம்வாலிபர், வாலிபருக்குப் பரிசளிக்கச் சிறந்த நூல்!

விலை ரூ. 15–00

கிறிஸ்தவ பெரியோர் வரிசை
சிறுவர் / வாலிபர் / பெரியோர்